1. CNS - The caffeine contained in one to two cups of coffee (100 to 200 mg) causes a decrease in fatigue and increased mental alertness as a result of stimulating the cortex and other area of the brain.
2. CNS - A high dose of caffeine has positive inotropic and chronotropic effect on the heart.
3. Excretory System: Caffeine has mild diuretic action that increases urinary output of Na, Cl and K.
4. Respiratory System: Caffeine and its derivatives relax the smooth muscles of bronchioles.

But "Too much of anything is good for nothing"
Increased dose of caffeine causes insomnia, anxiety, agitation. The done of about 10g of caffeine induces cardiac arrhythmics.

So, "BE SAFE"

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சிறுநீரகக் கற்களும் புரஸ்த கோள ஸ்தாபிதமும்

டாக்டர். AM. அப்துல் காதர், எம்.டி.(சித்தா)
இணைப் பேராசிரியர், அறுவை மருத்துவத் துறை,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி சென்னை – 106.

பொதுவாக வலி (pain) என்பது நோயாளிக்கு சிறிய அளவு நோயின் தொடர்பு கொண்டு பெரிய நோய் பாதிப்பு உள்ளவரை இருக்கக்கூடிய தன்மை உடையதாக இருக்கின்றது. இன்றையளவில் வலி பலதரப்பட்ட நோய்களிலும், பல நிலைகளிலும் பலதரப்பட்ட மக்களால் அன்றாடம் பேசிக் கொள்ளும் ஓர் செய்தியாகும். ஒருவருக்கு வலி என்று சொன்னால் அந்த வலியானது உடலின் எந்த பாகத்தில ஏற்பட்டிருக்கின்றது. அந்த வலியானது ஒரே இடத்தில் நிலைக்கும் தன்மையுடையதாக இருக்கின்றதா? இல்லையென்றால் வேறு இடத்துக்குப் என்பதை எல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

சாதாரணமாக மக்களில் பலர் இடுப்பு பாகத்தில் வலி இருக்கின்றது என்று கூறி மருத்துவரிடம் சென்று இடுப்பு வலி என்று மருத்துவம் மேற்கொண்டு வருகின்றார்கள். அவ்வாறு வலி என்று சொல்லும்போது அந்த வலியின் தன்மை (Nature of the pain) பரவும் தன்மை (Radiating Nature), வலியினை அதிகரிக்கச் செய்யும் காரணத்தை (Aggravating factors) போன்றவற்றை மனதில் கொள்ளவேண்டும். மேற் கூறியவைகளை நகரத்து மக்கள் தெளிவாக கூறுவதும், கிராமத்து மக்களின் நிலை அதிலிருந்து மாறுபட்டு காணப்படுகிறது.

ஒருவருக்கு வலியானது வயிற்றின் தொப்பூள் அல்லது வயிற்றின் இடது அல்லது வலது ஓர பக்கங்களில் திடீரென்று வலி ஏற்படுவதும், அந்த வலியானது சட்டென்று குறைந்து காணப்படுகின்ற தன்மையுடையதாகவும், ஏதாவது கடின வேலை செய்கின்ற போது அந்த வலியானது மிகவும் அதிகரிக்கும் தன்மையுடையதாக இருக்குமேயாயின், அந்த வலியின் நிலைமையை சாதாரணமாக ஏற்படும் நோயின் வலியிலிருந்து பிரித்தறிய வேண்டும்.

சிறுநீரக வலி (Renal Pain)

சிறுநீரக வலி என்பது ஓர் குறிப்பிட்ட இடத்தில் இருக்கின்ற வலியாகும். இதனை வலது அல்லது இடது சிறுநீரகம் அமையப்பட்ட இடத்தில் ஏற்படக்கூடிய வலியாகும். இதனை 'Renal painnor lRenal colic'என்று கூறுவார்கள். இதனை அறிகின்ற போது கையின் பெருவிரலைக் கொண்டு சிறுநீரகம் அமையப்பட்டு இருக்கும் முக்கோணப்பகுதி (Renal Angle)யில் அழுத்திப் பார்க்கின்ற போது இந்த வலியினை நோயளி தெளிவாக உணர முடியும். இந்த வலியானது குறிப்பிட்டுள்ள பாகத்தில் மட்டும் (localised pain) இருக்கின்ற வலியாகும். வலி பரவிக் காணப்படாது சிலநேரங்களில் அவ்வலியானது வயிற்றின் பகுதி வரை பரவுவது போல் பரவிக் காணப்படுகிறது. இவ்வாறு மேற்கூறிய நிலை காணப்படுமானால் அது சிறுநீரகத்தில் கல் இருப்பதாகக் குறிக்கும் நிலையாகும்.

சிறுநீரக சிறுநீர்ப்பை குழல் (Ureteric Pain)

இதில் ஏற்படுகின்ற வலியானது ஆரம்பிக்கும் நிலை எது என்று கொண்டால் அது 'சிறுநீரக முக்கோணப் பகுதி' (Renal Angle) ஆகும். அந்த வலியானது சிறுநீரக முக்கோணப்பகுதி (Renal Angle)யிலிருந்து ஆரம்பித்து. மேலிருந்து கீழே (loin) மற்றும் அரைக்கும் (groin) மேலும் விதைக்கும் (Testis) சில நேரங்களில் தொடையின் உள்பாகத்திற்கும் இந்த வலியானது பரவிக் காணப்படும். அவ்வாறு காணப்படுமேயானால் அதைureteric pain or ureteric colic என்று கூறுவர். அது ureterல் கல் இருப்பதைக் குறிக்கும் ஓர் நிலையாகும்.



மூத்திரப்பை வலி (Bladder Pain)

மூத்திரப்பையில் கல் (Stone) இருக்குமேயானால் அந்த வலியானது வயிற்றில் வலது அல்லது இடது hypogastrium அடிவயிறு காணப்படும். முக்கியமாக இந்த நோயில் வலியானது மிகவும் பரவிக்காணப்படுவதுடன் அதிக வலியினை தரக் கூடிய நிலையில் நோயாளி காணப்படுவார். இதில வருகின்ற வலியானது சிறுநீர் கழிக்கின்ற போது ஆண் குறியின் நுனிப்பகுதி வரை (Tip of the penis) சிறுநீர் செல்வது சிறிது தடைப்பட்டு அதிக வலியுடன் காணப்படும். சில நேரங்களில் குத்துவது போல் காணப்படும். சில நேரங்களில் சிறுநீரானது குறைந்து சொட்டு, சொட்டு போன்று செல்லும் தன்மையுடையதாக இருக்கும் அந்நேரத்தில் நோயாளி பல்லைக்கடிப்பதும், அடிவயிற்றைத் தடவுவதும், ஆண்குறியை அழுத்திப்பிடித்தாற் போன்றும் காணப்படுவான். ஏனென்றால் இதில் ஏற்படக் கூடிய வலி சில நேரங்களில் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில் காணப்படும். அத்தோடு சில நோயாளிகளுக்கு சிறுநீர் கழிக்கின்ற போது குருதியும் சேர்ந்து கழியும். அது சிறுநீர்ப்பையில் அமைந்திருக்கும் கல்லின் (Stone) தன்மையைப் பொறுத்து இருக்கும்.

இந்நிலை சிறுவர்களுக்கு ஏற்படின் அவர்கள் சிறுநீர் கழிக்கின்ற போதும், கழித்த பின்பும், ஆண்குறியின் முன் தோல் சிசுனப் பகுதியை கையால் பிசைந்து கொண்டு இருப்பார்கள்.

இந்நிலை சிறுவர்களுக்கு ஏற்படின் அது சிறுநீர்ப்பையில் கல் இருக்கின்றது என்பன அறிவதற்குரிய ஓர் சிறப்பான அறிகுறியாகும்.

பொதுவாக நோயாளிக்கு சிறு நீரகத்தில் கல் இருக்குமேயானால் அந்த கல்லானது சிறுநீரகத்திலிருந்து Ureter வழியாக நீர்ப்பையை(Bladder) அடைந்து அது சிறுநீர்பாதை (Ure-

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

thra)வழியாக வெளியே வர வேண்டும். அவ்வாறு சிறுநீரகத்திலிருந்து கல்லானது (Ureter) வழியாக வருகின்ற போது சில தடங்கல்கள் பகுதி (Stone blocking area) இருக்கின்றது (Five sites of anatomical narrowing of the ureter) .இது ஐந்து இடத்தில் அமையப்பட்டு இருக்கின்றது. இந்த இடங்களில் சிறுநீரகக் கல்லானது தடைப்பட்டு காணப்படும் நிலை உள்ளது.



I Uretero-Pelvic Junction
II Crossing the Iliac Artery
III Broad Ligament
IV Entering the bladder
V Ureteric Orifice

மேற்குறியிட்ட ureter- ல் கல் இருக்குமானால், அதை மூன்று பகுதியாக பிரிக்கலாம்: ureter மேல்பகுதி, நடுப்பகுதி மற்றம் கீழ்ப்பகுதி என்று வகைப்படுத்தலாம். அவ்வாறு ureter கீழ்ப்பகுதியில் இருக்கும் கல்லானது விரைவாக வெளிவருவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

சில நிலைகளில் சிறுநீர் கழிப்பதில் துயரங்கள் ஏற்படலாம் அல்லது சிறுநீர் கழிக்க ஆரம்பித்தலில் தாமதம் ஏற்படலாம் (delay in starting urine), அத்துடன் சிறுநீரானது குறைந்த அளவில் செல்லலாம். அவ்வாறு செல்லுகின்ற போது வலி இருத்தல், அடி வயிற்றை அமுழ்த்திப்பார்க்கின்றபோது அடிவயிறு வலித்தல் (lower abdominal pain) போன்றவைகள் இருக்குமேயானால் அது 'புரஸ்த கோள தாபிதம்' (Prostate enlargement) என்று அழைப்பர். இது வயது அதிகமுள்ள ஆண்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும். சில வேளைகளில் 40 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இது வருவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. இதில் முக்கியமாக சிறுநீர் அளவில் குறைந்து, அடிக்கடி செல்லும் தன்மையுடையதாக இருக்கும். காரணம் வலது அல்லது இடது ஓரத்தில் அமையப்பட்டு இருக்கும் புரஸ்த கோளம் தாபிதம் இருக்கமேயானால் அதில் சிறுநீரின் அளவானது கீழ் தங்கி காணப்படும்.

சில நேரங்களில் இவ்வாறு ஏற்படக்கூடிய 'புரஸ்தகோள தாபிதத்திலும் (Prostatic gland enlargement) கல்துகள்கள் சிறிது சிறிதாக சேர்ந்து "புரஸ்த கோளத்தில் கல்" என்ற ஒரு நிலை (Prostatic calculi) ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இது சாதாரணமாக சிறுநீரகத்தில் கற்கள் ஏற்பட்டு நீண்ட நாள் ஆனவர்களுக்கு இந்த நோய் வருவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. அது சிறுநீரகத்தில் ஏற்படுகின்ற கல்லின் தன்மையை பொறுத்து இது அமைகின்றது.

மேலும் புரஸ்த கோள தாபிதம் (Prostatic enlargement) ஏற்படுகின்ற போது அங்கு தாபிதம் ஏற்பட்டுள்ள பகுதியில் ஓர் பை போன்ற அமைப்பு (Prostatic pouch) ஏற்படுகின்றது. இதிலும் கல் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. 'ஜேக் கல்' (Jack stone calculi) என்று பெயர்.

நீர்த்தாரையில் ஏற்படும் கல்லடைப்பு (Urethral Calculi):

மேலும் இதைத்தவிர நீர்த் தாரையின் மேற்பகுதியில் கல்லடைப்பு ஏற்படுவதற்கு வாய்ப்ஸப இருக்கின்றது. இதற்கு ' Urethral Calculus' என்று பெயர்.

இவ்வாறு நீர்த்தாரையின் கல்லடைப்பு ஏற்பட்டு இருக்கும்போது திடீரென்று வலியானது ஆண்குறியின் மேற்பகுதியில் காணப்படும்.சில நேரங்களில் ஆண்குறி விரைப்புத் தன்மையின் போது இந்த வலியானது மிகவும் அதிகரித்து காணப்படும். அத்துடன் சில நேரங்களில் சிறுநீர் கழிக்கும் போது குருதியும் கலந்து செல்லும். அப்போது வலி மிகவும் காணப்படும். மேற்கூறிய நிலையில் இந்த நோயாளியை பிரித்தரிந்து அது எந்த நிலையை அடைய பெற்றுள்ளது என்று கண்டறிந்து உணர வேண்டும்.



மருத்துவம்

1. கடுக்காய் தோலை இளநீரில் ஊற வைத்து பொடித்து வாழைத் தண்டு சாறுடன் காலை, மாலை வெறும் வயிற்றில் வழங்கலாம்.

2. சிறுகண்பீளை குடிநீர் வேளைக்கு 120 மிலி காலை மாலை வழங்கலாம்.

இத்துடன் குக்கில் பற்பம், சிலாசத்து பற்பம், முட்டை ஓட்டு பற்பம் இவற்றை தனித்தனியே அல்லது சேர்த்தோ வழங்கலாம்.

3.வெடியுப்பு சுண்ணத்தை முள்ளங்கி சாறு அல்லது வாழைத்தண்டு சாற்றில் காலை, மாலை வழங்கலாம்

4. கீழ்கண்ட குடிநீரை காலை, மாலை கல்வெளியே வரும் வரை வழங்கலாம்.

நெருஞ்சில், சிறுபீளை, நீர்முள்ளி, காஞ்சொறிவேர், வில்வ வேர், குரோசானி ஓமம், வாழைத்தண்டு, முள்ளங்கி, இவைகளை ஒரே அளவாகக் கொண்டு குடிநீராக்கி காலை மாலை 120 மிலி முதல் 150 மிலி வரை வெறும் வயிற்றில் உண்டு வரலாம்.

நோயாளிகள் கடைபிடிக்க வேண்டிய உணவு முறைகள்:

1.தக்காளி, முட்டைகோஸ், காலிபிளவர், தயிர் போன்ற பொருள்களைத் தவிர்க்க வேண்டும்.

2. தண்ணீரை கொதிக்க வைத்து பின்பு வடிகட்டி குடித்தல் நலம்.

3. நாளொன்றுக்கு 900 (முதல் 1500 மி.லி. வரை தண்ணீர் குடிக்கவும்.

4. தினமும் இளநீர் பருகுதல் நல்லது.

5. உணவில் வாழைத்தண்டு, மற்றும் சிறுநீர் பெருக்கி செய்கையுடைய உணவுப் பொருட்களை வழங்கலாம்.

6. உணவில் உப்புத் தன்மை உடைய பொருட்களை விளக்குவது உத்தமம்.

FRIEND

A friend is one who multiplies our joys
A friend is a bundle of sympathy bound in clothing
A friend is one who comes in, when the whole world goes out.
A friend is one who knows all about you and loves you just the same

Chitramurugavel, Final- B.S.M.S.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

STUDENTS CABINET

MAGAZINE COMMITTEE

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

NSS COMMITTEE

SPORTS COMMITTEE

HOSTEL ASSOCIATION

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மனித உடல், கோவில், பஞ்ச பூதங்கள் ஆகிய மூன்றிற்கும் உள்ள தொடர்புகள்

டாக்டர். **A. ஜெகதாம்பாள்**, எம்.டி (சி)

விரிவுரையாளர்

அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை – 106.

உலகமானது பஞ்சபூதக் கூட்டுறவால்ஆகியது. அதாவது உலகமானது பிருதிவி அல்லது மண் அல்லது நிலம், அப்பு அல்லது நீர், தேயு அல்லது தீ, வாயு அல்லது காற்று, ஆகாயம் அல்லது விண் ஆகிய பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உண்டானது. அதுபோல மனித உடலும் பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உண்டானது., எங்ஙனமேனில் மண்ணின் கூறு தோல், மயிர், தசை, நரம்பு, எலும்பு ஆகியன. நீரின் கூறு குருதி, கொழுப்பு, மூளை, சிறுநீர், வெண்ணீர் (சுக்கிலம் சுரோணிதம்) ஆகியன தேயுவின் கூறு. அச்சம் சோம்பல் தூக்கம் இருமாப்பு ஆகியன காற்றின் கூறு இருத்தல்,கிடத்தல், நிற்றல், நடத்தல், ஓடல் ஆகியன. விண்ணின் கூறு ஆசை, மோகம், மதம், உட்பகை, வஞ்சனையாகும்.

ஆலயம் என்றால் என்ன என்ற வினாவிற்கு 'ஆ' என்றால் ஆன்மா - 'லயம்' என்றால் லயித்திருத்தல் அல்லது இருத்தல் என்று பொருள். அதாவது ஆன்மா தங்கியிருக்கும் மனித உடல் பற்றி சிறிது ஆராய்வோம். அதாவது ஆன்மாவுடன் கூடிய உடல் ஆலயத்திற்குச் சமமாகக் கூறப்படுகிறது. எங்ஙனமெனில், மனித உடல் ஒன்றினுள் ஒன்றாக அமைந்த 5 பகுதிகளையும் ஒன்றன் மேல் ஒன்றாக அமைந்த 7 படிகளையும் உடையது.

அந்த 5 பகுதிகளாவன: அன்னமயக்கோசம்- உணவு உடம்பு, பிராணமயக்கோசம்- மூச்சு உடம்பு, மனோமயக் கோசம்-மன உடம்பு, விஞ்ஞானமயக் கோசம்- அறிவு உடம்பு,ஆனந்தமயக்கோசம்- இன்ப உடம்பு. இந்த 5 உடம்புகளும் கோவிலில் இருக்கும் 5 பிரகாரத்திற்குச் சமமாக ஒப்பிடப்பட்டுள்ளது.

7படிகளாவன: மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை, சகஸ்ர ஆரம் அல்லது துரியம்.

கால்பாதம்-கோபுரம், மூலாதாரம்- குதத்திற்கம், குய்யத்திற்கும்-இடைப்பட்ட பகுதியை பலி பீடத்திற்கம், கொடி மரத்திற்கும் , சுவாதிட்டானம்- அடிவயிற்றுக்கும் தொப்புளுக்கும் இடையில் உள்ள பகுதியை அதிகார நந்தி இருக்கும் இடத்திற்கும், மணிப்பூரகம்- தொப்புள் அல்லது நாபிப் பகுதியை அம்பிகை தங்கி இருக்கும் இடமாகவும், விசுத்தி - தொண்டைப்பகுதியை வாகன நந்தி தங்கியிருக்கும் இடமாகவும், ஆக்கினை- புருவ மத்தியப் பகுதியை இறைவன் தங்கியிருக்கும் இடமாகவும், சகஸ்ரஆரம் அல்லது துரியப்பகுதியை உச்சி அல்லது நாடித்துடிப்பு உள்ள இடமானது இறைவனுடன் ஒன்றரக் கலத்தல் அதாவது முக்தி, சிவமுக்தி, பேரின்பம் பூரணம் அல்லது வீடுபேறு அடைதல்.

முதுகுத் தண்டில் 33 எலும்பு சங்கிலி வளையங்கள் உள்ளன. இதுதான் நம்மை நிமிர்ந்து நிற்கச் செய்கிறது. இதுதான் உடம்பு பாரத்தைத் தாங்குகின்றது. தேவர்களின் எண்ணிக்கை 33 கோடி. திருக்கோயில் கொடி மரங்களில் 33 வளையங்கள் உள்ளன. நாம் கழுத்தில் அணியும் அக்ஷ மாலையின் எண்ணிக்கை 32, நடுவில் தொங்கும் ஒரு மணியைச் சேர்த்து 33 ஆக இருக்கின்றது.

ஆத்மா உடல் எங்கும் வியாபித்திருந்தாலும் அதற்கு என்று ஆதாரமான இடங்கள் இவ்வுடலில் உண்டு. அவை வலது கரம், இடது கரம், நாபி, கண், மூக்கு, காது, உச்சி ஆகிய இந்த ஏழு இடங்களாகும் இவைகளுக்குரிய தேவதைகளாவன-வலது கரம் - சூரியன், இடதுகரம்- சந்திரன், நாபி-விஷ்ணு, கணகள் - ருத்திரன், மூக்கு - பிரம்மன், காது- சதாசிவன், உச்சி -பரமசிவன், உடல் முழுவதும்- மகேஸ்வரன். ஆத்மா இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்ற 3 ஸ்வரூபமாக உள்ளது. மனிதனின் உடல் பலத்தைப் காட்டிலும் அவன் ஆன்ம பலமே சக்தி வாய்ந்தது. எலும்பையும், சதையையும் இறுக்குவது உடல் பலம். சிந்தனையும், எண்ணமும் தெளிவுறுவதே ஆன்மபலம். மனிதன் தன் ஆன்ம பலத்தைப் பெருக்கிக் கொண்டு, தான் எடுத்துக் கொண்ட செயல் அனைத்திலும் ஏற்றம் பெற வேண்டுமானால் முதலில் மனத்தூய்மையும், மனவலிமையும் பெற்றாக வேண்டும். சூரியன் உதித்ததும் இருள் நீங்கியது என்கின்றோம். சூரிய ஒளியில் இருள் நீங்கி விட்ட பாவனை தோன்றுகிறது. சூரியன் மறைந்தவுடன் இருள் வருவது போல் தோன்றுகிறது. உயிர்களிடையே உள்ள ஆத்ம பிரகாசமும் இவ்விதமே உள்ளது. பஞ்சபூதங்கள், (பிருதிவி, அப்பு, தேயு. வாயு. ஆகாயம்) ஞானேந்திரியங்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி)கன்மேந்திரியங்கள் (கை, கால் வாய், எருவாய், கருவாய்) புத்தி, சித்தம், அகங்காரம், இவையாவும் அதனதன் போக்குப்படி நடக்கும் போது உண்மையான ஆத்ம ஞானம் பிரகாசிப்பதில்லை. இவையாவும் கட்டுப்பட்டு ஓரிடத்தில் லயிக்கும் சமயத்தில் ஆத்ம பிரகாசம் ஒளிர்கிறது. இந்த ஞான ஒளியில் திளைப்பதே பேரானந்தம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மனித உடலில் நவக்கிரகங்களின் ஆட்சி

R. கீதா,
இறுதியாண்டு பி.எஸ்.எம்.எஸ்.,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை – 106.

அண்டத்தில் உள்ள கோள்களின் கதிர்வீச்சு பூமியில் பாய்கின்றது. வானில் நாம் காணும் கிரகங்கள் , ஒளிப் பிழம்பாய் விளங்குகின்ற சூரியன் என்ற எரிகோளிலிருந்து சிதறிய தீத்துண்டுகளே. அவை சந்திரன், செவ்வாய், சுக்கிரன், குரு சனி, புதன், என்பனவாம். பஞ்சபூதங்களை நவக்கிரகமாகவும், 27 நட்சத்திரங்களாகவும் பாகு படுத்திவிட்டு மனிதனின் அங்கங்களின் குடியேறச் செய்கின்றன.

பஞ்சபூதங்களான பூமி,நீர்,நெருப்பு, காற்று. ஆகாயம் போன்ற தன்மைகளின் பிரதிபலிப்பாக குரு, சந்திரன், சுக்கிரன், சூரியன், சனி, செவ்வாய், ராகு, கேது, முறையே பூமி, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற இயக்கத்தை எடுத்துக் கொண்டு மேசம் முதல் மீனம் வரை உள்ள 12 ராசிகளை தன்னுள் அடக்கு மனிதனை இயக்கும் கர்த்தாவாக விளங்குகின்றன.

மண் - புதன்
நீர் - சந்திரன், சுக்கிரன்
தீ - சூரியன், செவ்வாய்
காற்று - சனி
ஆகாயம் - குரு

"கண்ட பஞ்ச பூதமாய் நின்றவாறு
குரு துவாய் செவ்வாயே தேயுவாகும்
மிண்டிய சுக்கிரன்றான் அப்புவானபூதம்
மேலான ஆகாயம் குருவுதாமே
கொண்டிருந்த பிருதிவியே புந்தியாகும்
குலவிய நுதல் மாதே கூறக்கேள்நீ
கொண்டிதொரு காற்றுடுவிம் ஆனபூதம்
கோதற்ற சனியென் நிற ருந்ததார்ளோ"
-குமாரசாமியம் சி.நேந்திரமாலை

நமது தேகத்தின் கால் பகுதியை பிர்மாவும், வயிற்றின் பகுதியை விஷ்ணுவும்,மார்பின் பகுதியை ருத்திரனும், கண்டஸ்தானத்தின் பகுதியை மகேஸ்வரனும், புருவமத்தியில் சதாசிவமும் நின்று மற்ற பகுதிகளை நவக்கிரகங்களுக்கு அளித்து நவக்கிரகங்கள் நனது இயக்கத்தை 27 நட்சத்திரங்களுக்கு பங்கிட்டு கொடுத்து அதன்பணியை செய்கின்றன.

எலும்பு, மாமிசம், தோல், நரம்பு போன்றவற்றின் பராமரிப்பு குருவும், வேர்வை, மூத்திரம், வாய்நீர், உதிரம், விந்து போன்றவற்றின் பராமரிப்பு சுக்கிரன்,சந்திரனும், பசி, தாகம், நித்திரை, சோம்பல் போன்றவற்றின் பராமரிப்பு, சூரியனும், செவ்வாயும், உசும்புதல், நடத்தல், இருத்தல், தாண்டல், இவற்றின் பராமரிப்பு புதனும், பயம், மோகம், துவேசம், திடம் போன்றவற்றின் பராமரிப்பு சனி, ராகு, கேது எடுத்துக் கொள்கின்றன.

மேற்கூறிய கிரகங்கள் மனித பிறவி எடுத்த நாம் இப்பூமியில் அவதரித்து பிறந்த நேரத்திற்கொப்ப, ஊழ்வினை, புண்ணிய பாவங்களுக்கு தக்கபடி சோதிட சாஸ்திரத்தில் ஜாதகத்தில அமர்ந்து செயல்புரிகின்றன.

மேற்கூறிய கிரகங்கள் தங்கள் தங்களுக்குரிய இராசிகளிலேனும் நட்பு. ஆட்சி. உச்சம், திருகோண கேந்திரமேறியும். சுபக்கிரக சம்பந்த பார்வை பெற்றேனும் எவ்வித குறைபாடுகளிமில்லாமல் ஜெனன காலத்தில் சமரசப்பட்டு இருக்குமாயின் அப்படி ஜனிப்பவனுக்கே அந்தந்த கிரகத்தின் தசாபுக்தி அந்தரப்பலன்கள் முற்றிலும் குறைவின்றி கொடுப்பதன்றி அந்தக் காலங்களில் திரவிய ஆபரணம் வஸ்து, போஜனம் முதலியவை வழங்கப்படும்.

கர்மதோஷமும் நோய்களும்

ஒருவர் பிறந்த நேரத்தில் உதயமாகும் ஜென்மலக் கினத்திற்கு 6-ஆம் இடமாக வரும் வீடும் அந்த வீட்டுக்குரிய வரும் பலமாக இருந்தால்

வாத, பித்த, சிலேத்தும திரிதோடத்திற்கு ஆளாவர். 8ஆம் வீடு பலமாக அமைந்து இவ்வீட்டிற்கு உரியவரோடு 6க்குரியவர் சம்பந்தப்பட்டால்

தேவ-குரு-பிதுர். தெய்வவோபம் என்ற குற்றத்தால் நோய்பயம் பாதிப்பு ஏற்படும்.

மேற்படி 12ஆம் வீடும் அதற்குரியவரும் பலமாக அமைந்து இவரோடு 6க்குரியவர் தொடர்பு பெற்றால் போட்டி, பொறாமை - வைராக்கியத்தின் முதலியவற்றின் மூலம் பாதிப்பு ஏற்படும்.

6ஆம்பாவம் - சத்ரு (அ) நோகஸ்தானம்
8ஆம் பாவம் - ஆயுள்ஸ்தானம்
12ஆம் பாவம் - விரய ஸ்தானம் (அ) அயனசயன சுகஸ்தானம்
(அட்டவணைப்படி)

மேலே உள்ள ராசிகளில் லக்குனத்தின் அதிபதி 6, 8க்கு அதிபதி வரும் காலங்களில் அந்தந்த ராசிகளின் குறிப்பிட்ட விசயங்கள் மூலம் தொல்லை நோய்கள் ஏற்படும்

பிறப்பு லக்கினத்தின் 6க்குரியவர் உள்ள ராசியின் விசயங்கள் மூலம் நோய் பாதிப்புகள் வரும். 6க்குரிய கிரகம் பார்க்கும் நாசிப்படி உள்ளவைகளாலும் நோய்பாதிப்பு வரும்

பிறப்பு லக்குனத்தின் 8க்குரியவர் உள்ள ராசியின் விசயங்கள் மூலம் (அ) அவர் பார்வை விழும் ராசியின் விசயங்கள் மூலம் ஆபத்து உயிர் பயம் ஏற்படும் பிறப்பு லக்கினத்தின் 12க்குரியவர் உள்ள ராசியின் விசயங்கள் மூலம் (அ) அவர் பார்வை விழும் ராசியின் விசயங்கள் மூலம் பணவிரயம், பொருள் சேதம், உயிர்சேதம் ஏற்படும்.

எனவே ஜாதகங்களில் ஏற்படும் இக்குற்றங்களை நன்கு ஆய்வு செய்து ஜாதகர்களின் நிலைபார்த்து இவ்வகை தோவி குணங்களை சொல்லி, அவற்றை போக்கும் வழிமுறைகளான நவக்கிரகங்களின் வழிபாடு, அந்தந்த கிரகங்களுக்குரிய புண்ணிய தலங்களுக்குச் சென்றுவருதல், இல்லையெனில் அவற்றிற்குரிய தானியங்கள் பொருள்களின் மூலம் பூஜை செய்து வழிபட்டு பலனைப் பெறலாம்.

நவக்கிரகங்களுக்குரிய மூலிகையும் உலோகமும்
சூரியன்-எருக்கு-தாம்பிரம்-மாணிக்கம்
சந்திரன்-பலாசு-ஈயம்-முத்து
செவ்வாய - கருங்காலி - செம்பு - பவளம்
புதன் - நாயுருவி - பித்தளை - மரகதம்
குரு - அரசு - பொன் - வைரம்
சுக்கிரன் - அத்தி - வெள்ளி - வைடூரியம்
சனி - வன்னி - இரும்பு - நிலம்
நாரு - அருகம்புல் - கருங்கல் - கோமேதகம்
கேது - தர்ப்பை - துருக்கல் - வைடூரியம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மீனம் குரு+ஆட்சி வீடு வாத சம்பந்தம் சமரசமான சூ டு, ஈரல் காது பிற புலன்கள். தொடைப்பகுதியல் கட்டி சிறுநீரகம், மூளை	**மேஷம்** செவ்வாய் - ஆட்சி வீடு பித்தசம்பந்தம் ரத்த தொடர்பு, ரணம், விபத்து. காயங்கள், பெண்களின் பிறப்புறுப்பில் ஏற்படும் நோய், முட்டுகளில் ஏற்படும் வலி	**ரிஷபம்** சுக்கிரன் - ஆட்சி வீடு சிலேத்தும சம்பந்தம் நீர்த்தாரைகள், சமரச குளிர்ச்சி, ஈரமும், ஆண்குறி, நாசித் துளை, சொற்பக் கொ, குளிர்ச்சி பற்றிய வியாதி	**மிதுனம்** புதன்- ஆட்சிவீடு வாத சம்பந்தம் பித்தப்பை, தோல், நரம்பு மண்டலம், திக்கித் திக்கி பேசுதல், வாயில் புண். சொறி. சிரங்கு
கும்மம் சனி- ஆட்சி வீடு வாத சம்பந்தம் முழங்கால் மூட்டுகளில் நீர் கால் முடக்கு கரும்படைகள் முழங்கால் முறிவு			**கடகம்** சந்திரன் - ஆட்சி வீடு சிலேத்தும சம்பந்தம் மனஅமைதியற்ற நிலை நுரையீரலில் ஏற்படும் நோய். குளிர்ச்சியை பற்றிய நோய்கள்
மகரம் சனி- ஆட்சி வீடு வாத சம்பந்தம் மூளை பாதிப்பு யானைக்கால் வியாதி, வயிற்றுவலி, தலைமுடி உதிர்தல்			**சிம்மம்** சூரியன் - ஆட்சியில் பித்த சம்பந்தம் இருதய நோய் ஒற்றைத் தலைவலி வலதுகண் பாதிப்பு சுரம்
தனசு குரு-ஆட்சி வீடு வாத சம்பந்தம் காது கேளாத நிலை தொண்டையில் புண் சிறுநீரக பாதிப்பு நுரையீரல் பாதிப்பு மூலவியாதி	**விருச்சகம்** செவ்வாய் -ஆட்சி வீடு பித்தசம்பந்தம் அதிக சூடு, வரட்சி, சூட்டைப் பற்றிய பித்தம், காமாலை, அம்மை, வயிற்றில் புண், பெரியம்மை, புற்றுநோய், விரணம், உடலில் காயம்	**துலாம்** சுக்கிரன் - ஆட்சிவீடு சிலேத்தும சம்பந்தம் கண்பாவையில் கோளாறு பிறப்புறுப்பில் புண்கள், மேகநோய், சர்க்கரை வியாதி	**கன்னி** புதன் - ஆட்சி வீடு வாத சம்பந்தம் குளிர்ச்சி கலந்த வரட்சி நரம்புமண்டலம் தொடர்பான நோய்கள் நாவு, இனிய சொற்கள்

குறிப்பிடும் உடலின் பகுதி

சூரியன்	- வயிறு, இருதயம், கண், தலைப்பகுதி	-பித்த நாடி
சந்திரன்	- மார்பு, பிடரி	-கபநாடி
செவ்வாய்	-இரத்தம், எலும்பினுள் மஜ்ஜை, தலை பெண்களின் ஜனன உறுப்பு, கழுத்து	-பித்த நாடி
புதன்	- நரம்புமண்டலம், தோல், பித்தப்பை,	-வாத நாடி
குரு	- கொழுப்புச்சத்து, காது, தொடை	-வாத நாடி
சுக்கிரன்	- முகம், கண், பிறப்புறுப்புகள், கர்ப்பபையின் தன்மை, கருமுட்டை உற்பத்தி	-கப நாடி
சனி	- எலும்புகள், ரோமம்	-வாத நாடி
ராகு, கேது	- கால்கள்	-பித்தநாடி

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பூநீறு

டாக்டர். கோ. தியாகராஜன், எம்.டி (சித்தா), விரிவுரையாளர்.
டாக்டர். சரளா தியாகராஜன், பி.எஸ்.எம்.எஸ்., உதவி விரிவுரையாளர்.
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை -106.

பூத்து வருகின்ற நீறு பூநீறு எனப்படும். இதை "பூவதுபோல் பூநீறு பூமி வேலி கட்டப் பூக்கும்" என்ற அடியால் உணரலாம். பூநீர் என்பது சித்த விஞ்ஞானத்தின் தலை சிறந்த கருப்பொருள். பூநீற்றை பல்வேறு வகையில் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தி வருகின்றனர். இத்தகைய பூநீற்றை பற்றி இங்கு காண்போம்.

பூநீர் கிடைக்கும் இடம்

திருச்செந்தூரை அடுத்த சோனகன்விளை என்னும் ஊருக்கு அருகில் செவல் தரையிலும் பூநீறு விளைகின்றது. சித்தமருத்துவ மேதை, முன்னாள் இந்திய மருத்துவதுறை இயக்குனர், டாக்டர் பு.மு. வேணுகோபால் அவர்கள் சித்தர்கள் நூல்வாயிலாக தெரிந்ததை விளக்கியுள்ளார்கள்.

"ஆமேதான் பூநீரின் வளப்பங் கேளீர்
அகில மெலாம் பூநீர்கள் மெத்தவுண்டு
தாமேதான் பாண்டிவள மெத்த நாடு
தாக்கான ஆவனயார் பிரம்மதேசம்
நாமேதான் கண்டபடி சேரநாடு
நாதக்கள் சோழவள மெடுப்பார்பூமி
போமேதான் நெடுங்காலந் தன்னிற் சென்று
பொங்கமுடன் தானெடுப்பார் பூநீராமே"

உலகில் பூநீர் எடுக்கக்கூடிய இடங்கள் ஏராளமாக இருப்பினும் அதில் பாண்டியநாடு , ஆவுடையார் கோவில், சேரநாடு, சோழநாடு, முதலிய நாடுகளுக்கு சென்று பூநீர் எடுத்து வருவார்கள்.

"பூநீரிலின்னம் வெகுதளமும் சொல்வேன்
புகழான காளாஸ்திரீ சிவகெங்கைதானும்
பூநீராம் பாலைவனம் பூம்பாரை மாகும்
புகழான திண்டுக்கல் பசுமலையாகும்
சோநீராந் தில்லைவனம் காளிங்க மடுவு
சொர்ன மென்ற பூதியது வடமதுரையாகும்
தேநீரான் தென்மதுரை வயோத்தி நகரமாகும்
தெனிவான பொன்னகரந் தானுமாமே"

காளாஸ்திரி, சிவகெங்கை, பாலைவனம், மணப்பாரை, திண்டுக்கல், பசுமலை, தில்லைவனக்காடுகள். காளிங்கமடுவு. வடதென்மதுரை. பொன்னகரம் முதலிய இடங்களிலும் பூநீறு கிடைக்கும். இவையன்றி திருஎன்று ஆரம்பமாகும் திருத்தலங்களிலும் பூநீறு கிடைப்பதாக ஒரு கருத்து உண்டு.

"ஆமேதான் பாஞ்சாலன் பூமிவளமாகும்
அப்பனே தென்புவனம் வடபுவனமாகும்
தாமேதான் புல்லானி தீர்த்தக் கரையாகும்
தென் விளையும் நர்மதா வடமேரு மாகும்
போமேதான் யித்தாதி தேசநாடு
பொலிவான வளர்பூமி யெல்லையாகும்
பாமேதான் பூநீறு யெடுக்குங்காலம்
பகருவேன் காலமது செப்பக்கேளே"

மேலும் பாஞ்சாலம், தென்புவனம், வடபுவனம், புல்லாணி, தீர்த்தக்கரை, நர்மதை நதிக்கரை, வேங்கடமலை போன்ற மேற்கூறப்பெற்ற இடங்களே பூநீர் எடுக்கக்கூடிய வளமுள்ள நிலங்களாகும்.

ஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகள் பூநீர் உவர் பூமியில்தான் விளைகின்றது என்றும் கடுமையான உவர் பூமியில் விளையும் பூநீர் சிறப்பானது என்றும், தமிழ்நாட்டில் பல இடங்களில் பூநீர் விளைந்தாலும் கூட அருப்புக் கோட்டைக்கு அருகில் திருச்சுழி என்ற இடத்திலும், சிவகெங்கை அருகில் கோவாழ்ஊர் என்னுமிடத்திலும் கிடைக்கும் பூநீர் சிறப்பானது என்று கூறுகிறார்.

பூநீர் எடுக்கக்கூடிய காலம்

பூநீரை அதன் சிறப்புப் குறையாமல் அதனுடைய பிறப்பு நேரத்தில் எடுப்பது என்பது மிகவும் கடினம். இதை எடுப்பதற்கு பல நூல்களில் பலமுறைகள் கூறப்படுகின்றது.

"கேளேதான் சித்திரா பருவமுன்னும்
கெணிதமுடன் பங்குனிக்கு முன்னதாக
தாளேதான் அமாவாசை பூர்ணவட்டம்
நாள்தேடி பரிபாஷை தாமுணர்ந்து
பாளேதான் போகாமல் நாளைப் பார்த்து
பாரினிலே யெல்லவரும் நூலாராய்ந்து
வேளேதான் சித்தர் நூல் நுணுக்கம் பாத்து
வேதாந்தத் தாயினும் வாசங் கொண்டே"

மாசி, பங்குனி, சித்திரை ஆகிய முன்று மாதங்களின் முழுநிலவாகிய பௌர்ணமி அன்றும், அமாவாசையன்றும் நாட்களை கணித்து அறிந்து சித்தர்கள் எழுதியுள்ள நூற்களை ஆய்ந்து அதன் நுணுக்கங்களை அறிந்து சக்தியை பூசை செய்து,

"கொண்டே தானுபவாச மிருந்து கொண்டு
கோடான கோடிமலை தேசங்கொண்டு
கண்டேதான் கானாறு தேசம் விட்டு
காடுமலை நதிவனமுந்தான் கடந்து
விண்டேதான் பூநீறு மெடுக்குங்காலம்
விண்ணுலகில் சித்தர் முனி சொல்லைப்போல
அண்டர் முனி ராட்சதர்களிருக்கும் காலம்
அங்கனவே தாம் போனார் மாந்தர்தாமே"

விரதங்களை மேற்கொண்டு கோடான கோடிமலை நாடுகளையும், காடு., மலை, நதி முதலியவற்றையும் கடந்து அறிந்து சித்தமுனிவர்களும், அண்ட முனிவர்களும், ராட்சதர்களும் சொல்லியுள்ளபடி மனிதர்களும் சென்றனர்.

"மாந்தராந் தவயோகி சிவயோகி தானும்
மார்க்கமுடன் முப்பவனங் காணவென்று
வேந்தர்பதி முதலான தேசராஜர்
வெகுகோடி மாந்தரெல்லாமுப்பை காண
போந்தமுடன் நிலாப்பருவம் தன்னிற்சாமம்
பொங்கமுடன் சாமவேளை தன்னில்
சாந்தமுடன் பிரணவத்தின்மாறல் கொண்டு
சட்டமுடன் பூநீறு மெடுப்பார் தாமே"

மாந்தர்களும், தவயோகம் செய்பவர்களும், சிவயோகம்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

செய்பவர்களும், மார்க்கமுடன் மூன்று புவனங்களையும் காணவேண்டுமென்று மந்திரிகளும், மன்னர்களும், கோடிக்கணக்கான மனிதர்களும் முப்புவைக் காண முழு நிலாப் பருவத்தில் இரவு பனிரெண்டு மணிக்கு அமைதியுடன் பிணவத்தின் "ஓ" ங்காரத் தொனிவுடன் வாசியை கட்டி கலைகளை மாற்றி, மாற்றி பயிற்சி செய்து கொண்டே பூநீர் எடுப்பார்கள்.

"எடுக்கையிலே சீனபதி தேசந்தன்னில்
யெழிலான பூநீறு மெடுக்கு மார்க்கம்
அடுக்குடனே யோராளின் கீழ்மட்டாக
அப்பனே அவர்பூமி தன்னைத் தோண்டி
இடுக்க மென்ற குழிதனிலே மண்ணைத்தானும்
யெழிலாகத்தானே பரப்பி மூடிப்போடு
ஒடுக்கமுடன் கெட்டனை களதிகங் கொண்டு
உத்தமனே பன்னாடை மேலே சாத்தே"

பூநீர் எடுக்கும் பூமியில் ஓர் ஆள் உயரத்திற்கு (6அடி ஆழம்) குழி தோண்டி, தோண்டிய குழியில் மேல்மட்டம் வரை நிரம்ப மணலைக் கொட்டிப் பரப்பி பன்னாடைகளினால் மூடிவிடவேண்டும்.

"சாத்தியே மூங்கிலென்னும் குழல்கள் தன்னை
சட்டமுடன் தானிருந்தி சாற்றக்கேளு
நேர்த்தியுடன் குழல் தனையே பூமிதன்னில்
நேர்மையுடன் தானடித்து சில்லுப்போடு
பூர்த்தியுடன் மூன்றானுள் வெடியச்சாமபு
பொங்கமுடன் தான் திறந்து பர்க்கும்போது
காத்திரமாய், கதிர கதிராய் பூநீர் தாமும்
கதிரவன் போல் பூத்திருக்க கண்டிப்போமே"

மணல்பரப்பிய இடத்தில் மூங்கிற் குழாய்களை வைத்து அடித்து குழாயின் வாயிற்கு சில்லிட்டு வைத்து மூன்றாவது நாள் (அதாவது பௌர்ணமி கழிந்த மூன்றாவது நாள்) விடியற்காலை 3.30மணிக்கு மேற்படி சில்களை திறந்து பார்த்தால் அதனுள் சூரிய ஒளியைப் போன்று கதிர், கதிராக பூநீர் பூத்திருக்கும்.

வாதிகளெல்லாம் ஒன்று சேர்ந்து பூநீர் எடுத்து வந்து அண்டகல் சுண்ணம் முடிப்பதற்கு பிண்டமென்ற செயநீரையும் பனி நீரையும் பானையிலிட்டு பூநீரை கொட்டி காய்ச்சுவார்கள்.

பூநீரை காய்ச்ச வேண்டுமென்றால் பனிநீரில் நன்கு கரைத்து வைத்து தெளிவெடுத்து மறு பாண்டத்திலிட்டு காய்ச்சி உப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். மறுபடியும் மேற்கூறிபடி பனிநீரில் உப்பை கரைத்து தெளிவறுத்துக் காய்ச்சி உப்பெடுக்கவும். இவ்வாறு பதின்முறை காய்ச்சி உப்பு எடுப்பார்கள்.

பூநீரின் பெருமைகள்

பூநீர் என்ற அபூர்வ மருந்துப் பொருளை செய்வதற்கு ஆதாரச் சரக்காக இது அமைகிறது. பல பாடாணங்களை எளிதில் பூநீரின் உதவியால் சுத்தி செய்ய இயலும். சுத்திகரிக்கப்பட்ட பூநீர் சேர்த்து செய்யப்படும் மருந்துகள் வீரியத்தில மிகவும் கூடுதலாயுள்ளன. சில அபூர்வ மூலிகைகளின் சாறு கெட்டுவிடாமல் பாதுகாக்க பூநீர் உபயோகப்படுகின்றது.

உதாரணமாக வெள்ளைப் பாடாணம், வேறு முறைகளில் சுத்தி செய்ய குறைந்த பட்சம் 7 தினங்களாகும், பூநீர் மூலமாக சுத்தி 12 மணிநேரத்தில் நிறைவு பெறுகின்றது. ஆகவே பூநீருக்கு சுத்திமூலி என்ற பெயரும் உண்டு.

சுத்தித்த பூநீர் கொண்டு காளான் செயநீர் தயாரித்து, சில பாடாணங்களை பற்பம் செய்தால் அவைகள் வியத்தகு வேகங்களில் வியாதிகளை கண்டிக்கின்றது. மற்றும் பற்ப செந்தூரங்களில் முதல் மாத்திரைகளில் சிறிதளவு பூநீர் சேர்த்தால் அனுபானங்களின் உதவியின்றி நேரடியான பிரயோகத்திற்கு உகந்ததாகி விடுகின்றன.

பூநீர் வேறு பெயர்கள்

ஏகமூலி, சாகாமூலி, சிவஉப்பு, சக்தி உப்பு, பிரம்ம உப்பு. அண்டம். தலைப்பிண்டம் என்பதாகும்.

மனித உடல் 96 வகை சத்துக்களிலானது (தத்துவங்கள்). அதே போல் பூநீரிலும் 96 சத்துக்கள் அடங்கியுள்ளது. முப்புவை பூநீர் கொண்டு செய்வதால் பிணியாளரின் சரீரத்தில் குறைவான எந்த சத்துக்களையும் ஈடுசெய்ய முடிகிறது. பூநீரில் உள்ள ஒருவகை எண்ணெய் பசையே அதன் உடனடி பிரயோகங்களுக்கும், உபயோகங்களுக்கும் பெரிய தடையாக உள்ளன. இந்த எண்ணெய்ச் சத்தை பூநீரின் கண் அகற்றிவிட்டால், அஃது மனித உடலில் குறையும் எவ்வகை சத்துக்களையும் ஈடு செய்யும் நிலையை அதன் தொடர்பாக எவ்வகை வியாதியையும் குணமாக்கும் வல்லமை பெற்றதாகிவிடுகின்றது.

பூநீருக்கு சித்தர்கள் "அண்டம்", "தலைப் பிண்டம்" என்று கூறியதோடு நில்லாமல் 7மாதபிண்டம், 9மாத பிண்டம், 10மாத பிண்டம் என்று சொல்லி சென்று விட்டார்கள். இதன் மடிப்பு, மறைப்பு தெரியாமல் பல சிறந்த சித்த மருத்துவர்கள் கூட ரசவாதம் செய்வதையே குறியாகக் கொண்டு தலைப்பிண்டங்களை தேடி அலைகின்றார்கள். ஆனிமாதம் பூநீர் உற்பத்தியாகும் காலம். அது முதல் மார்கழி மாதத்தில் எடுக்கும் பூநீர் 7மாத பிணம், என்றும். தை மாதம் எடுப்பது 8மாத பிண்டம் என்றும் மாசி பங்குனி திங்கள்களில் எடுப்பது 9,10மாத பிண்டங்களென்றும் பெயர் கூறியுள்ளார்கள். 7,8 பிண்டங்களாக (மார்கழி, தை, திங்களில் எடுப்பது) மாந்தீரிக வேலைகளுக்கு உபயோகப்படுகின்றன. 9,10 மாதங்களில் (மாசி, பங்குனி பூர்ணிமையில் எடுப்பது) வைத்திய முப்பூ, ரசவாத முப்பூ, ஞான முப்பூ ஆகியவைகள் செய்ய உபயோகப்படுகின்றன.

முப்பூ செய்வதற்கு பூநீரின் அம்சமுடைய மற்றய மூன்று பொருட்களும் உபயோகப்படுகின்றன. அவை கடலில் விளையும் நுரையில், மலையில் உண்டாகும் உதகநீர், உதகஉப்பு, சோற்றுஉப்பு ஆகியவை. ஆனாலும் பூநீர் கொண்டு செய்யப்படும் முப்பூவே சிறப்பானதாகும். கல்ப முப்பூ செய்து உண்டு சரபயிற்சி மூலம் சரீரத்தை காய கற்பம் செய்து ராஜயோகங்கள் மூலம் சமாதிநிலையெய்தி சித்தர்களின் நிலையை அடைய முடியும்.

இவ்வளவு சிறப்புடைய பூநீற்றை, பர்மா, பாலிலெத்தீன், தாய்லாந்து, சீனா, இலங்கை ஆகிய தேசபாஷைகளிலும் சித்தர்கள் முப்புவிற்கு பரிபாஷை சொல்லியிருப்பதாக தெரிகிறது. மேலும் எந்த தேசத்தவர்களும் நமது இந்தியாவிலேயே முப்பூ இருப்பதாக தெரிந்து எடுத்து முடித்திருக்கிறார்கள் என விளங்குகின்றது. எனவே இச்சிறப்புடைய பூநீற்றை நாமும் உபயோகித்து பயன் பெறுவோமாக!

நன்றி : நந்தி மாத இதழ்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE



BIO DIVERSITY OF MEDICINAL PLANTS IN THE EVERGREEN FORESTS OF KOLLI HILLS, SOUTH INDIA

C. V. Chittibabu

Assistant Professior, Dept. of Medicinal Botany,
Govt. Siddha Medical College, Chennai -106

Introduction

The Indian subcontinent is known for its rich biodiversity. It is one of the 12 mega - diversity centres of the world. Biodiversity or biological diversity refers to the total species richness of plants and animals in a place. Indian forests harbour greater species diversity due to its tropical climate. So researches have focussed in assessing the forest biodiversity.

Indian tropical forests, with the wealth of species found in them, potentially contain cures to many diseases that afflict the human-kind. Hence it has inventoried the ever green forest patches in the Kolli Hills with the objective of finding out medicinal plant diversity in them and their medicinal uses.

Study area and methods

The study area comprises tropical evergreen forests in the Kolli hills of the Eastern Ghats, located near Namakkal town in TamilNadu, South India.The Kolli hills per se covers an area of 283 km^2 and consits of heterogeneous vigitation along elevation gradient. The foothills are clothed with scrub vegetation and with increasing elevation occur dry deciduous, mixed deciduous and evergreen forests.

Patches of evergreen forests, locally called 'sholas' occur between 900m and 1300m above mean sea level (a.s.l.) and are found with a veritable mixture of species. The trees in them robust, and tall (30m) with dense crowns. The tree branches are often festooned with epiphytic moss, ferns, lichens, aroids and orchids. Epiphylls are also abundant. Herbaceous and woody vines are not infrequent. The ground vegitation is dense and the ambience is humid and moist, very moist during rains when leeches abound.

Four 2-ha (200m x 100m) study plots were permanently marked in four 'shola' forests. They were subdivided into 10m x 10m quadrans to facilitate the inventory of trees lianas and herbs. The field study was carried out during May 1996 to June 1997.

Results and Discussion

In the total 8-ha studied, there were 78 tree species, 26 lianas and 52 herbs. The number of genera, families and population density are given in table -1.

Table -1 Consolidated details of biodiversity inventory in the kolli hills.

Variable	Trees	No. of lianas	Herbs
Species richness	78	26	52
Genus richness	61	24	49
Family richness	36	18	35
Stand density (individuals)	3825	384	9680

The following are the important medicinal plants used by the 7800 tribal families in the Kolli hills besides the illegal collection and transport to other places:

Trees

1. Allophylus serratus (Tam: Amalai, Sapindacceae)

Tree; only 6 individuals in 8-ha; Root astringent, employed in checking diarrhoea. Distributed in Perumakkai shola near sholakkadu in the Kolli hills.

2. Antidesma menasu (Tam. Nolaidali; Euphorbiaceae) Small tree; 62 individuals distributed in Perumakkai shola and Vengodai shola; Leaves antidote to snake poison and when young boiled and used in syphilitic cachexia.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

3. Artrocarpus heterophyllus (Tam: palapazham; Moraceae)

Huge tree; 98 individuals found distributed in Perumakkai, Vengodai, Kuzhivalavu and Mottukkadu sholas. Leaves used in skin diseases and antidote to snakebite; Root used internally in diarrhoea; Juice of plant applied to glandular swellings and abscesses to promote suppuration; Unripe fruit astringent and ripe fruits are laxative.

4. Bischofia javanica (Tam: Milachadai; Euphorbiaceae)

Large tree; 41 individuals found in Vengodai and kuzhivalavu sholas. Leaves contain vitamin C and are used in curing sores.

5.Callicarpa Tomentosa (Tam: Vettilaipattai; verbenaceae)

Small Tree; 34 individuals found mainly in Vengodai Shola; Decoction of bark and root is useful in fever, hepatic obstruction and skin diseases.

6.Canthieem dicoccum (Tam: Imburuttan;Rubiaceae)

Small tree; 16 Individuals in vengodai shola; Bark is used in fever.

7. Elaeocarpus serratus (Tam: Ulang-karei; Elacocarpaceae)

Small Tree; 88 individuals distributed in vengodai shola; Leaves used in rheumatism.

8. Flacourtia indica (Tam Sottaikala; Flacourtiaceae)

Small tree; 43 individuals found in Mottukkadu shola. Fruit is used in jaundice and enlarged spleen.

9. Memecylon Umbellatum (Tam: Kasai; melastomataceae)

Medium tree; 808 individuals in the four sholas; predominant in the kolli hills. Leaves used as a cooling astringent; in conjunctivitis as a lotion; internally given in gonorrhoea. Decoction of root useful in excessive menstural discharges.

10.Mimmusops elengi (Tam: Magilam; Sapotaceae)

Medium tree; 30 individuals found mainly on Perumakkai shola; Bark astringent, tonic, useful on fevers; Leaves used in snake-bite.

11. Myristica dactyloides (Tam: Kattu Jadikkai; Myristicaceae)

Large tree; 171 individuals in the four sholas inventoried seeds carminative, stomachic, useful in flatulency, nausea and vomitting.

12. Terminalia paniculater (Tam: Pumarudu; Combretaceae)

Large tree: only 6 individuals found on Vengodai shola; Juice of fresh flowres used in chdera and opium poisoning. Bark diuretic and cardiotonic.

Lianas

13. Aganosma cymosa (Apocynaceae)

Fifteen (15) individuals recorded in vengodai shola. Plant emetic.leaves in biliousness and flowers in diseases of the eye.

14. Cayratia pedata (Tam: Kattuppirandai;Vitaceae)

Eleven (11) individuals recorded in Perumakkai shola .Leaves astringent, refrigerant, used for ulcers. Leaf decoction used to check uterine reflexes.

15. Diplochisia glaucescens (Tam: Kottaiyachachi; Menispermaceae)

Twenty two (22) individuals recorded on Permukkai and Vengodai sholas. Leaves powdered and taken in milk to cure syphilis, biliousness and gonorrhoea.

16. Embelia basaal (Tam: Vayavilanga; Myrinaceae)

Twelve (12) individuals in Vengodai shola. Dried fruit anthilmintic, astringent, alterative, tonic, in scorpion-sting and snake-bite, Decotion of dried fruits used for fevers and diseases of chest and skin.

17. Entada pursaetha (Tam: Sillu; Mimosaceae)

Six (6)individuals in Perumakkai shola .Seeds, stem and bark poisonous. Seeds fish poison, considered tonic, emetic, antiperiodic, and anthelmintic. paste from seeds applied locally for inflammatory glandular swellings. Juice of wood and bark used as external application for ulcers.

18.Gnetum ula (Tam: Karuncharai; Gnetaceae)

Twenty three (23) individuals in all the sholas. Leaves used as fish poison. Stems and roots antiperiodic.

19. Hiptage benghalensis (Tam: Vasandi; Malpighiaceae)

Forty seven (47) individuals inall the four sholas studied. Leaves useful in chronic rhematism, skin diseases and asthma. Juice of

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

leaves insecticide and application for scabies

20. Morinda umbellata (Tam: Nuna; Rubiaceae)

Twenty six (26) individuals in the four sholas. Leaves in conjunction with certain aromatics, in four form of decotion, used in diarrhoea and dysentery.

21. Abutilon hirtum (Tam: Vadattuti; Malvaceae)

Leaves demulcent, bark astringent, diuretic, roots in fever, seeds laxative and demulcent.

22. Ageratum conyzoides (Tam: Poompillu;Asteraceae)

Juice of root antilithic. Leaves styptic, applied to cuts and sores and externally in ague.

23. Asparagus racemosus (Tam: shimai shadavari; Liliaceae)

Root refrigerant, demulcent, diuretic, approdisiac, antispasmodic, alterative, and antidysenteric.

24. Dioscorea oppositifolia (TamKavalakodi; Dioscoreaceae)

Tubers used as an external application to reduce swellings, in scorpion - sting and snake-bite.

25. Dioscorea pentaphylla (Tam;Kattukkilangu; Dioscoreacea)

Tubers used for dispersing swellings and as tonic

26. Lantana camara (Tam Unnichedi; Verbenaceae)

Plant diaphoretic, carminative, antispasmodic. Decotion given in tetanus, rheumatism and malaria, tonic, much used in atoxy of abdiminal viscera.

27. Passiflora edulis (Tam: Siruppunaikkali; Passifloraceae)

Decoction of leaves used on biliousness and asthma. Fruit emetic. Leaves applied on the head in giddness and asthma.

28. Renusatia vivipara (Tam Paambuchedi; Araceae)

Root with ruemeric used as remedy for itch. Juice with cow's urine considered alexipharmic.

29.Rhaphidophora laciniata(Tam; Ilattimaravalai; araceae)

Juice of the plant used in snake-bite and scorpion-sting.

30. Scutellaria violacea (Lamiaceae)

Decoction of plant used in epilepsy, intermittent fever and ague.

Conclusion

The plants have been arranged in alphabetical order according to their scientific names so that ther will be no difficulty for readers to find any particular medicinal plant. For the sakeof brevity, the botanical description of plants as been omitted.

The kolli hills harbours rich diversity and medicinally important plants. As human activities keep escalating with ever- increasing population, forest ecosystems near human settlements are made fragile. Hence documenting the whole plant species diversitiy and thereby emphasizing the need for conservation should form the programme of further research.

Acknowledgement

The author thanks theTamil Nadu Forest Department for granting site permission to carry out biodiversity inventories in the kolli hills, and Dr.N. parthasarathy (Reader, Pondichery University) for guiding this investigation. Due thanks to Dr. K. Jeyapal (Principal, Govt.Siddha Medical College, Chennai -106) for his encouragement.

Golden Words

The words which comes from your heart should be "blessing" & not "cursing"

Freedom : Ask your freedom ; by writting with pen & Not by fighting with gun

-R.Hanulekha,II B.S.M.S.,

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

Hon'ble Speaker **Dr. K.KALIMUTHU,** M.A., Ph.D.
at Students Association Inaugural Day Function (25th July 2001)

Hon'ble Minister for Health, **Thiru S.SEMMALAI** BSc., B.L.,
at "Mapping the Future"-One day Seminar (18th Dec 2001)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

THIRD YEAR (*SIMIL*-'99)

SECOND YEAR (*THENDRAL*-'2K)

FIRST YEAR (*POTHIGAI*-'01)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இரைப்பு நோயும் செரியாமையும்

டாக்டர். ஆ.க. பாரி, பி.ஏ.பி.ஐ.எம்.

சிறப்பு நிலை உதவி விரிவுரையாளர்.

சுற்றுச்சூழல் அனைத்து வகைகளிலும் மாசுபட்டுள்ள தற்காலச் சூழ்நிலையில் இரைப்பிருமல் எனும் ஆஸ்துமா நோயினில் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கை ஏராளம். மருத்துவ வல்லுநர்கள் ஒவ்வாமையே இந்நோய்க்கான மூலகாரணமென்று கூறுகின்றனர். இக்கருத்தினை சித்த மருத்துவ நூல்களிலும் காணலாம். உணவாதி செயல்களாலும் உடல்வன்மை குறைந்த நிலையில், ஐயக் குற்றத்தினை மிகுதிப்படுத்தும் உணவாலும், புல், பூண்டு, நெல், கேழ்வரகு போன்றவைகளின் சுணைகளாலும் இந்நோய் வருவதாகத் தமிழ் மருத்துவம் கூறுகின்றது.

நோயின் தீவிரம்

இருமல், மூச்சுத் திணறல் மார்பிலுண்டாகும் இறுக்கம், களைப்பு போன்றவை இந்நோயின் முக்கிய குறிகுணங்களாகும். ஒரு சிலருக்கு, முன்பனி, பின்பனிக் காலங்களிலும் சிலருக்கு ஒவ்வாமையை விளைவிக்கும் உணவாதி செயல்களாலும் அவ்வப்போது ஏற்படலாம். மேலும் சிலரிடம் ஆண்டு முழுவதும் இக்குறிகுணங்களைக் காணலாம்.

சிகிச்சை முறைகள்

ஆங்கில மருத்துவம், இந்திய மருத்துவ முறைகள் போன்ற அனைத்துப் பிரிவுகளிலும் இந்நோய்க்கான சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

சித்த மருத்துவத்தில் இதற்கான சிறந்த மருந்துகள் கூறப்பட்டுள்ளன. அம்மருந்துகளின் செய்முறை, அதில் சேர்ந்துள்ள சரக்குகளின் குணங்களைக் கூர்ந்து நோக்கினால் சித்தர்களின் அணுகுமுறை நமக்கு நன்கு விளங்கும். "நோய் நாடி நோய்முதல் நாடி" என்ற தொடரின் பொருளும் நமக்குப்புரியும்.

இரைப்பிருமல் நோயினருக்குப் பெரும்பாலும் செரியாமை நோயும் சேர்ந்தே இருப்பதைக் காணலாம். அரோசகம். வயிற்றுப்பிசம், மலச்சிக்கல் போன்ற குறிகுணங்களைக் கூறக் கேட்கலாம். சித்த மருந்துகள் இரைப்பு நோயின் கடுமையைக் குறைக்கும்போதே, செரியாமை, மலச்சிக்கல் போன்றவற்றையும் நீக்குவதைக் காணலாம்.

இந்நோய்க்கு பல மருந்துகள் வழங்கப்படுகின்றன. சில ஆண்டுகளாக அறிஞர் அண்ணா அரசினர் சித்த மருத்துவமனையில் செயல்படும் இரைப்பிருமல் சிறப்புச் சிகிச்சைப் பிரிவில் வழங்கப்படும் மருந்தகளில் ஒன்று திப்பிலி இரசாயனம். அதன் பலன் கருதியே இக்கட்டுரையில் அம்மருந்தினைக் குறிப்பிடுகின்றேன். இதில் திப்பிலி, மிளகு, சுக்கு, சீரகம், ஓமம், கருஞ்சீரகம், குரோசாணி ஓமம்., சிற்றரத்தை பேரரத்தை, கடுக்காய் நெல்லிக்காய், தான்றிக்காய், இலவங்கப் பத்திரி, கொடிவேலி வேர்ப்பட்டை, ஏலம், தாளிசபத்திரி, இலவங்கப்பட்டை, சீனி, தேன் போன்ற சரக்குகள் சேர்ந்துள்ளன.

இச்சரக்குகளின் செய்கைகள்

சுக்கு : வெப்பமுண்டாக்கி, பசித்தீத்தூண்டி. அகட்டுவாய்வு அகற்றி

மிளகு : வெப்பமுண்டாக்கி, நச்சரி, அகட்டுவாய்வு அகற்றி

திப்பிலி : வெப்பமுண்டாக்கி, அகட்டுவாய்வு அகற்றி

சீரகம் : வெப்பமுண்டாக்கி, அகட்டுவாய்வு அகற்றி

ஓமம் : அகட்டுவாய்வு அகற்றி., பசித்தீத் தூண்டி

கருஞ்சிரகம் : புழுக்கொல்லி, பசித்தீத் தூண்டி, அகட்டுவாய்வு அகற்றி

குரோசானி ஓமம்: துயரடக்கி, உறக்க முண்டாக்கி

சிற்றரத்தை : கோழையகற்றி பசித்தீத் தூண்டி

பேரரத்தை : கோழையகற்றி, பசித்தீத் தூண்டி

கடுக்காய் : உடல் தேற்றி, துவர்ப்பி

நெல்லிக்காய் : மலமிளக்கி, துவர்ப்பி

தான்றிக்காய் : துவர்ப்பி, மலமிளக்கி, உரமாக்கி

இலவங்கப்பத்திரி : வெப்பமுண்டாக்கி, அகட்டுவாய்வு அகற்றி, பசித்தீத்தூண்டி

தாளிசபத்திரி : கோழையகற்றி, உரமாக்கி,பசித்தீத்தூண்டி

கொடிவேலிபட்டை :உரமாக்கி, பசித்தீத்தூண்டி

ஏலம் :அகட்டுவாய்வு அகற்றி, பசித்தீத்தூண்டி

இலவங்கப்பட்டை : அகட்டுவாய்வு அகற்றி, வெப்பமுண்டாக்கி

மேற்கண்ட சரக்குகளில் பெரும்பானவை, அகட்டுவாய்வு அகற்றி, பசித்தீத்தூண்டி அகிய செய்கைகளைக் கொண்டிருப்பதைக் காணலாம் . மிளகு ஒவ்வாமையை நீக்கவல்லது . கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஆகிய மூன்றும் மலமிளக்கியாகவும் உடல்வன்மை குறையாமலும் செயலாற்றக் கூடியவை. சிற்றரத்தை, பேரரத்தை, தாளிசபத்திரி போன்றவை கபத்தினை வெளிப்படுத்தவும், மேலும் இதில் சேர்க்கப்படும் தேன் சருக்கரை இரண்டும் மருந்தினைச் சாப்பிடும் பக்குவத்திற்கு மாற்றியும் மருந்தினைக் கெடாமலும் பாதுகாக்கின்றது.

பத்திய முறைகள்

ஒவ்வாமையை விளைவிக்கும் உணவாதி செயல்களைத் தவிர்த்து, இரவில், எளிதில் சீரணமாகும் உணவினை, இரவு தொடங்கு முன்னர் அரைவயிறு உண்டு சிறிது நேரங்கழித்து உறங்கச் செல்வோமாயின் உண்ட உணவு பாதி செரிமனமான நிலையிருக்கும். இதனால் பின்னிரவில் ஏற்படும செரிமனக் கோளாறுகள், அதைத் தொடர்ந்து வரும் இருமல், மூச்சுத்திணறல் ஆகியவற்றைத் தவிர்க்கலாம்.

மேலும் கால ஒழுக்கம் என்னும் தலைப்பில் நமது நூல்களில், முன்பனி, பின்பனிக் காலங்களில் உடல் வெப்பத்தினைக் குறையாமல் பாதுகாத்திடத் தேவையான உணவு வகைகளான நெய்ப்புப் பசையுள்ள மாமிசம் உளுந்து, கோதுமை இவற்றால் செய்த உணவு வகைகளையும், வெல்லம், அரிசி, திராட்சை இவற்றினாலான பானங்களையும் கொள்ளலாம்.

'மருந்து செய்யியல்' என்ற நோக்கில் ஆய்வுகளை மேற்கொள்வோமாயின் சித்த மருந்துகள் முழுமையான பலன்களை அளிக்க வல்லது என்ற கூற்றினை அறிவியல் பூர்வமாக உலகுக்கு உணர்த்தலாம்.

இக்கட்டுரையைத் தொகுக்க உதவிய நூல்கள்:

1. சித்த வைத்தியத் திரட்டு
2. பொருட்பண்பு நூல் - மூலிகை
3. நோயில்லா நெறி
4. நோய் நாடல்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இலக்கியம் காட்டும் சித்த மருத்துவம்

மரு.ப.பார்த்தீபன், எம்.டி.(சித்தா), **மரு. க. கனகவல்லி,** எம்.டி.(சித்தா),
விரிவுரையாளர்கள், அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை–106.

காலத்தின் கண்ணாடி என்று போற்றப்படு பவைகள் இலக்கியங்களே! வரலாற்று ஆசிரியர்களால் சரியான சரித்திர சான்றுகளுடன் அந்த காலத்திய மக்களின் வாழ்க்கை நெறி முறைகளை கூறமுடியாத போது இலக்கியங்கள் நமக்கு பண்டைய காலத்திய மக்களின் வாழ்க்கை, அவர்கள் வாழ்க்கையில் பயன்படுத்தியவைகளை அறிய முடிகிறது.

இந்த வையகத்துள் வாழ்வாங்கு வாழ வழிமொழியும் திருவள்ளுவர் மருந்து என்னும் அதிகாரத்தில் பத்து குறள்களில் மருத்துவர், மருந்து செய்பவர், நோய் அறிதல் பற்றியும், உடலுக்கு ஏற்படும் பிணியின் காரணம் உடலில் உள்ள மூன்று குற்றங்களே என்றும் கூறி அவற்றிற்கு காரணமும் கூறியுள்ளது வியக்கத்தக்கது.

மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று (941)

நோயினை எவ்வாறு பரிகரிக்க வேண்டும் என்று கூறுமிடத்து

நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (948)

இவ்வாறாக பத்து குறள் கூறியுள்ளார்.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்."

என்று திருவாய் மலர்ந்தருளிய திருமூலர், வலிவான உடலில் பொலிவான உள்ளம் தழைக்கும் நல்வாழ்வுக்கு வழி சொல்லும் மருத்துவக் கருத்துக்கள் பல தமிழ் இலக்கியத்தில் காணக்கிடக்கின்றன.

திருமந்திரம்

திருமந்திரம் பன்னிரு திருமுறைகளுள் பத்தாவதாக உள்ளது ஆகும். இதில் நோய்வாய்ப்பட்டவரை எப்படி ஆராய வேண்டும் என்றும் நோய் நீக்கம் பற்றியும் விளக்கியது சிறப்பு.

உடற் கூறுகளை பற்றிய அறிவு தற்காலத்தே உள்ள சிறப்பு எனினும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உடலில் எழுபத்து இரண்டாயிரம் நாடிகள் உள்ளன; அவற்றில் மூலாதார நாடி பத்து எனவும் குறிப்பிட்டுள்ளார்.

"மறுப்பது உடல் நோய் மருந்தெனலாகும்
மறுப்பது உள நோய் மருந்தென ச்சாலும்
மறுப்பது இனிநோய் வாராதிருக்க
மறுப்பது சாவை மருந்தெனலாமே !"

உடல் நோயையும் உள்ளப் பிணியையும் தடுப்பது மருந்து. நோய் நீக்கமே நோக்கம். மேலும் நோய்வராமல் தடுத்து சாவைத் தள்ளிப் போடுவதே மருந்தின் ஆற்றல் என்றும் கூறுகிறார்.

நோய் வாய்ப்பட்டவரை ஆராய முறை கூறும்போது

"நாடியால் முன்னோர் சொன்ன நல்லொலி
பரிசத்தாலும்
நீடிய விழியினாலும் நின்ற நாக்குறிப்பினாலும்
வாடிய மேனியாலும் மலமொடு நீரினாலும்
கூடிய வியாதி தன்னைச் சுகமுடன் அறிந்துபாரே"

என்றார்.

கீழ்க்கணக்கு நூல்கள்

அறத்தை விளக்குகின்ற நூல்களில் முக்கியமானது மூன்று. 1. திரிகடுகம், 2. சிறுபஞ்சமூலம், 3.ஏலாதி. இவை நம் மருந்துகளின் பெயரால் உருவாகியுள்ளது. நம் மருத்துவத்திற்கு பெருமை சேர்ப்பது ஆகும்.

1. சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியன கலந்து செய்வது திரிகடுகு சூரணம் அதே போல ஒவ்வொரு பாடலிலும் மூன்று கருத்துக்களை கூறுவது திரிகடுகம்.

2. கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன சேர்ந்தது சிறுபஞ்சமூலம் அதே போல ஐந்து செய்திகள் தருவது சிறுபஞ்சமூலம்.

3. ஏலாதி சூரணம், ஏலம், இலவங்கம், தக்கோலம்,சுக்கு, மிளகு, திப்பிலி சேருவது அதேபோல ஏலாதியில் ஆறு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன.

ஆசாரக்கோவை

இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் காலம் 6ஆம் நூற்றாண்டு, மக்களின் அன்றாட நாளொழுக்கம் (குளிப்பது, உறங்குவது, உண்பது, இறைவழிபாடு) போன்ற ஒழுக்கத்தினை முறையாக நமக்கு அளிப்பது ஆசாரக்கோவை. ஆசாரம் என்பது ஒழுக்கம், கோவை என்பது தொகுப்பு. எனவே அன்றைய நாட்களிலேயே Hygiene என்று கூறப்படும் நோயில்லா நெறியினை நமக்கு அளித்தவை இலக்கியங்களே.

உதாரணமாக, நீராட வேண்டிய காலம் என்ற தலைப்பில் 10ஆம் பாடலில்,

தேவர் வழிபாடு தீக்கனாவாலாமை
உண்டது கான்றல் மயிர்களைதல் ஊண் பொழுது
வைகுதுயிலோடு அணைவிழைச்சுக்...

இறைவனை வழிபடுவதற்கு முன்னம், தீக்கனாவைக் கண்டகாலத்தும் தூய்மையில்லாத போதும், உண்டதை வாந்தி எடுத்தபோதும், மயில் களைந்தவிடத்தும், நெடுநேரம் உறங்கிய காலத்தும்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

புணர்ச்சி மேற்கொண்ட காலத்தும், மலம் கழித்தகாலத்தும் நீராடல் அவசியம் என்று எப்பொழுது நீராட வேண்டும் என்று கூறியுள்ளார். இவ்வாறாக அனைத்து ஒழுக்க நெறியையும் தந்து நோய்வாராமல் தடுப்பது ஆசாரக்கோவையாகும். இதை எழுதியவர் கயத்தூர் பெருவாயின் முள்ளியார்.

திருவள்ளுவமாலை

இந்த நூலில்

சீந்தி நீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனனாய்

மோந்தபின் யார்க்கும் தலைக்குத்து இல்.

அதாவது சீந்தில் கொடி, நீர்க்கண்டம். சுக்கு இவற்றுடன் தேன் சோத்து முகர தலைவலியானது சென்றுவிடும் என்று கூறப்பட்டுள்ளது.

இன்னா நாற்பது, இனியவை நாற்பது

உடலுக்கும் மனதுக்கும் பெரும் துன்பத்தை தரக்கூடிய செயல்கள் மொத்தம் நாற்பதாக கூறி அவைகளை செய்யாமல் இருத்தல் நலம் பயக்கும் என்று கூறியுள்ளார்.

இனியவை நாற்பதில் கூறப்பட்ட அனைத்து பாடல்களிலும் உடல், மனம் இரண்டும் நன்னிலையில் இருக்க வைக்கச் சொல்லப்பட்டவையாகும்.

சங்க ஏடுகளில்

தொன்மையான காப்பியங்களை நமக்கு அருளிய தொல்காப்பியர் "வாயுறை வாழ்த்து" என்னும் பகுதிகளில், கசப்பான மூலிகைச் செடிகளான வேம்பும் கடுகும் முதலில் வெறுக்கப்பட்டாலும் முடிவில் நலம் பயப்பதால் பெரிதும் விரும்பப்படும் என்று கூறுகிறார். சங்கப் புலவர்களில் ஒருவராகிய "உறையூர் மருத்துவர் தாமோதரனார்", அகநானூற்றில் இருபாடல் (133, 257), புறநானூற்றில் (60,170,321) ஆகிய பாடல் பாடியுள்ளார். மேலும் மரத்திலிருந்து மருந்து எடுப்பது பற்றி, புறநானூறு 180லிலும், மருந்து எடுபபது பற்றி நற்றிணை (136)விலும், பாலைகலி (17) லிலும் கூறப்பட்டுள்ளது நம் மருத்துவத்திற்கு சான்று ஆகும். அகநானூறு பாடல 271ல்

"சொல்லூயிர் நிறுத்த சுவைக் காய் நெல்லி" எனக் குறிப்பிட்டுள்ளார். நெல்லியின் மருத்துவப்பயனை, மரணத்தைக் கூட தள்ளி வைக்கும் ஆற்றல் நெல்லிக்கு உண்டு என்று கூறியுள்ளார்.

புறநானூறு பாடல்களில் போருக்கு செல்லும் போது வெட்சிப்பூவை சூடினர் என கூறியுள்ளனர் வெட்சிப்பூவுக்கு உள்ளழலாற்றி செய்கை உண்டு என்பதை அறிந்து வைத்திருந்தனர் என்பது தெளிவு.

குறுந்தொகையில்

தாவரங்களை அவர்கள் எவ்வாறு உற்று நோக்கினர் என்பது அதனை தம் பாடல்களில் பயன்படுத்தியதைக் கொண்டு நமக்குப் புலப்படும்.

ஆம்பல், பாதிரி, வெண்கூதானம், பயற்றங்கொத்து, வெண்சிறுகடுகு. தாழை எனப் பல,

நெடுநீர் ஆம்பல் அடைப்புறத் தன்ன

கொடு மென் சிறைய கூர் உகிர்ப் பறவை... (352)

வேனிற் பாதிரிக் கூன் மலர் அன்ன

மயிர் ஏர்பு ஒழுகிய அம்கலுழ் மாமை.... (147)

பயிறுபோல இணர பைந்தாது படீஇயர்

உழவர் வாங்கிய கமழ் பூ மென் கினைத்... (10)

இவ்வாறாகப் பல செய்திகளைக் கூறியுள்ளனர்.

இராமகாதை

கம்பர் அருளிய இராமகாதையுள் கும்பகர்ணன் வதைபடு படலத்தில் புண்ணை ஆற்றும் முறையினை கூறும் பொழுது.

"உடலிடைத் தோன்றிற்று ஒன்றை அறுத்து

அதன் உதிரம் மாற்றி சுடலுறச் சுட்டு வேறே னார்

மருந்தினால் துயரம் தீர்வர்"

என்று கூறியுள்ளார்.

இராஜ இராஜ சோழன் காலத்தில் தமக்கை குந்தவையார் "ஆதூல சாலை" என்ற மருந்தகத்தை குடந்தையிலும், தஞ்சையிலும் நிறுவி, மருத்து வருக்கும், ஊழியருக்கும் ஊதியம் வழங்கிட ஆவண செய்தார் என கல்வெட்டுச் சான்று கூறுகின்றது.

வேதாகமத்தில் கூறிய மருத்துவம்

வேதாகமத்தில் பல மூலிகை பற்றியும் நோய்க்குறிகுணம், கணிப்பு பற்றியும் கூறப் பட்டுள்ளது. பக் 140 வேலியராக 13ல்.

(4) அவன் சீரத்தின் மேல் வெள்ளை படர்ந்திருந்தாலும் அவ்விடம் அவனுடைய மற்றைய தோலைப் பார்க்கிலும்...

(11) குஷ்டம் தோலிலே வெள்ளையான தடிப்பிருந்து அது மயிரை வெண்மையாக மாறப்பண்ணிற்றும், அந்தத் தடிப்புள்ள இடத்தில் இரணமாம்சம் உண்டென்றும் கண்டால்

என குஷ்டரோகம் பற்றி யூகி முனிவர் கூறிய தடிப்பு குட்டரோக தன்மையினை விளக்கியுள்ளார். இவைத்தவிர பல மூலிகை பயன் படுத்திய விபரம் கூறப்பட்டுள்ளது. உதாரணத்திற்குச் சில..

அத்தியிலை (ஆதியாகமம் 3:7)

புன்னை (ஓதி. 30:37)

கொத்துமல்லி (யாத். 25:5)

கருவாப்பட்டை (யாத். 30:23)

வெள்ளைப் பூண்டு (எண். 11:5)

மருதமபுரம் (ஏசா. 44.14)

அசோக மரம் (ஏசா. 44:14)

ஆமணக்கு (யோனா 3:6)

இவ்வாறாக தமிழ் இலக்கியங்கள் முதல் வேதாகமம் வரை எடுத்து அலசிப்பார்த்தால் பலவிதமான மருத்துவக் கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. இதை காணும் போது தமிழர் மருத்துவம் மூத்த முதல் மருத்துவம் என்ற பேருண்மை நமக்கு அறிய வருகிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மகளிர் மட்டும்

டாக்டர். T.K. கல்யாணசுந்தரம், எம்.டி. (சி), டாக்டர். S. காந்திமதி, எம்.டி (சி),
டாக்டர். M. சசிகலா, பி.எஸ்.எம்.எஸ்., திருமதி. ஷோபனா ஜெயராஜ், எம்.எஸ்.சி.
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை –106.

மாதவிடாயின் போது ஏற்படும் இரத்தப்போக்கு ஒருவரின் உடல்நிலை, உணவ பழக்க வழக்கங்கள், சூழ்நிலை மாற்றம், கருப்பையின் அமைப்பு ஆகியவை களைப் பொறுத்து வேறுபடும். மாதவிடாய் இரத்தப் போக்கின் அளவு ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்படும். இயல்பாக ஒவ்வொரு மாதவிடாய் சுழற்சியின் போதும் 35-80மிலி இரத்தப் போக்கு ஏற்படுகிறது.

மாதவிடாயின் போது ஏற்படும் இரத்தப்போக்கினால் பாதிக்கப்பட்டு எப்போது தன் இயல்பான வேலையை செய்ய இயலாத நிலை ஏற்படுகிறதோ அந்நிலையையே "பெரும்பாடு" என்று அழைக்கிறோம். மாதவிடாய் இரத்தப்போக்கு 80 மிலி க்கு மேல் ஏற்பட்டால் அதை பெரும்பாடு என்று கணிக்கலாம். இந்நிலை மகளிருக்கு பூப்பு எய்தியது. முதல் பூப்பு முடிவதற்குள் ஏதேனும் ஒரு காலகட்டத்தில் காணப்படுகிறது. பரவலாக பெரும்பாடு 50 சதவீதத்திற்கு மேல் மக்களிடையே காணப்படுகிறது.

காரணங்கள்

நாளமில்லா சுரப்பிகளில் இருந்து சுரக்கப்படும் ஹார்மோன்களின் சமநிலை சீரழிவு (imbalance) ஏற்படுவதே பெரும்பாட்டுக்கு முக்கிய காரணமாகும். இந்நிலை இன்றைய சமுதாயத்தில் அதிகமாக இருக்க காரணம் இன்றைய சமுதாய, பொருளாதார மாற்றங்கள், மனஉளைச்சல், தோல்வி, அதிக எதிர்பார்ப்பு, அதிக உழைப்பு ஆகியன. இந்நிலை பொதுவாக மகளிரின் வாழ்க்கையில் மூன்று பருவங்களில் காணப்படுகிறது. அவையாவன

1. பூப்பு எய்தும் பருவம் – (Pubertal age group)
2. பேறுகால பருவம் – (Childbearing age group)
3. கடைபூப்பு பருவம் – (Pre-menopausal age group)

I. பூப்பு எய்தும் பருவம் (12 முதல் 18 வயது வரை)

பூப்பு எய்திய பருவத்தில் முதல் இரண்டு வருடங்களுக்கு ஹார்மோன்களின் சுரப்பு சரிவர சுரக்காத காரணத்தால் இந்நிலை அதிகளவில் ஏற்படுகிறது. இரண்டு வருடங்களில் இச்சுரப்பிகள் முழுவளர்ச்சி அடைவதால் இந்நிலை மாறி ஒரு சிலருக்கு தானாகவே இயல்புநிலை திரும்புகிறது.

காரணங்கள்

இப்பருவத்தில் பெரும்பாடு

1. தேர்வுகளைப் பற்றிய பயம், தோல்வி
2. கருப்பையின் வளர்ச்சியின்மை
3. ஹார்மோன் சுரப்பு குறைவதால் ஏற்படும் PCOD (Poly cystic ovarian disease)
4. பரம்பரை

போன்ற காரணங்களால் உண்டாகிறது.

குறி குணங்கள்

1. மாதவிடாயின்போது அதிகஅளவு இரத்தப்போக்கு (Menorrhagia)
2. மாதவிடாய் சுழற்சி 28 நாட்களுக்கு பதிலாக குறைந்த காலகட்டத்தில் ஏற்படுதல் (Polymenorrhagia)
3. மாதந்தோறும் வராமல் தவறுதல் (மாதவிடாய் மாதம் ஒரு முறை வராமை) (Amenorrhia)
4. மாதவிடாயின் போது வலி (Dysmenorrhia)

II. பேறுகாலபருவம் (19 முதல் 40வயது வரை)

இப்பருவத்தில் மகப்பேற்றிற்கு பிறகு பெரும்பாலும் பெரும்பாடு உண்டாகிறது.

காரணங்கள்

1. பேறுகாலத்தில் ஏற்படும் சிக்கல்கள் - (APH-Anti Partum haemorrhage & PPH - Post Partum haemorrhage)
2. கருக்கலைப்பு - இயற்கை மற்றும் செய்றகை முறை (Spontaneous and Induced)
3. முத்துப்பிள்ளை (Vesicular mole)
4. கருப்பையின் அளவு பெருத்தல் (Bulky uterus)
5, கருப்பையில் ஏற்படும் நார்தசைக் கட்டிகள் (Fibroid)
6. கருப்பை உள்சவ்வு அழற்சி (Endometritis)
7. கருப்பையின் உள்சளிச்சவ்வு கருப்பை மற்றும் வேறு இடங்களிலும் காணப்படுதல் (Endometriosis)
8. ஹார்மோன் சார்ந்த மற்றும் கருத்தடை சாதனங்கள் (Intra Uterine Contraceptive devices)
9. இரத்த சோகை (Anaemia)
10. சில ஹார்மோன் மருந்துகளை அதிகளவு எடுத்துக் கொள்ளுதல் (Anabolic Steroids)
11. குறைவீதன நோய் (Hypothyroidism)

இவைகள் தவிர மகப்பேற்றிற்கு பிறகு கடின உழைப்பு, போதிய ஓய்வின்மை, ஊட்டசத்து குறைபாடு போன்றவைகளாலும் பெரும்பாடு உண்டாகிறது.

III. கடை பூப்புக்காலம் (40 முதல் 50வயது வரை)

பூப்புக்காலம் முடிவதற்கு முன்பு இந்நிலை பெரும்பாலும் காணப்படுகிறது.

காரணங்கள்

1. மனஉளைச்சல்
2. கடின உழைப்பு
3. ஓய்வின்மை
4. இரத்தசோகை
5. வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றம் மற்றும் தோல்வி

மாதவிடாய் முடிந்து ஒரு வருடத்திற்கு பிறகு மீண்டும் இரத்தப்போக்கு ஏற்பட்டால் கருப்பையில் புற்றுநோய் ஏற்பட்டுள்ளது என்பதை சோதனைகள் மூலம் கணிக்கலாம்.

மேற்கொள்ள வேண்டிய ஆய்வு முறைகள்:

Investigations

1. Blood - Total Count, Differential Count, Haemoglobin, Packed cell volume, Erythrocyte Sedimentation Rate
2. Blood - Sugar, Cholesterol
3. Blood - Prothrombin time, Bleeding time, Clotting time, partial Thromboplastin time
4. Thyroid function test
5. HCG - (Human Chorionic Gonadotropin) (Roule out Pregnancy or Vesicular mole)
6. Pap smear - கருப்பை சளிச்சவ்வை எடுத்து ஆய்வு

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

செய்தல்

7. Prolactin level - (Pituitary dysfunction)
8. Ultrasound Scan
9. H/o Hirsuitism
10. Hystrosalpingography

மருத்துவ முறைகள்

1. அதிகப்படியான இரத்தப்போக்கை கட்டுப்படுத்தல்
2. மாதவிடாய் சுழற்சியை ஒழுங்குபடுத்துதல்
3. மீண்டும் இந்நிலை வராமல் தடுத்தல்

எளிய மருத்துவம்

1. அசோகமரப்பட்டையை 100கி. எடுத்து 200மிலி பசும்பாலும் 800மிலி நீரும் சேர்த்து காய்ச்சி ஐந்தில ஒரு பங்காக்கி நாள் ஒன்றுக்கு 2-3 முறை கொடுக்கலாம். இதனால் கருப்பையின் வன்மை அதிகமாகும் (Uterine Tonic).
2. மலைவேம்பு இலை, காய் இவற்றின் சாற்றினை சர்க்கரையுடன் சேர்த்து தர மாதவிடாய் சுழற்சி ஒழுங்குபடுத்தல்
3. கருஞ்சீரகப் பொடியை 1கி. வீதம் மூன்று வேளை கொடுத்துவர மாதவிடாய் வலி, மாதவிடாய் தடைபடுதல் ஆகியன தீரும்
4. பெருஞ்சீரகத்தை இளவறுப்பாக வறுத்து பொடித்து சர்க்கரை சேர்த்து நாள் ஒன்றுக்கு 2கி.வீதம் தர கருப்பை வன்மை பெறும்.
5. மாதுளைப்பழச் சாறுடன் கற்கண்டு சேர்த்துக் கொடுக்க அதிகப்படியான இரத்தப்போக்கு குறையும் உடல் வளமை பெறும்.
6. அத்திப்பாலுடன் சர்க்கரை அல்லது வெண்ணெய் சேர்த்துத் தர அதிகப்படியான குருதிப்போக்கு குறையும்
7. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவற்றை சேர்த்து பொடித்து தினம் 1 கி. வீதம் இருவேளை கொடுக்கலாம்.
8. மாசிக்காயை பொடி செய்து உண்ண பெரும்பாடு தீரும்.
9. வாழைப்பூவினை புட்டு செய்து அதன் சாறெடுத்து பனங்கற்கண்டு சேர்த்து வழங்கலாம். சமைத்து சாப்பிட பெரும்பாடு தீரும்.
10. நுணாபழம் பட்டையை குடிநீர் செய்து வழங்க மாதாந்திர சுழற்சி ஒழுங்குபடும்.
11. பண்ணைக் கீரையை பொரியல் செய்து உண்ண பெரும்பாடு தீரும்.
12. மாங்கொட்டையை குடிநீர் செய்து தரலாம்.
13. தேற்றான சமூலத்தை உணவுடன் சேர்த்து உண்ண கருப்பை வலிமைப்படும். (Uterine Tonic)
14. இலவங்கப்பட்டையை குடிநீர் செய்து தர பெரும்பாடு தீரும்.

உணவு முறை

1. உணவில் கால்சியம் (Ca) சத்து அதிகம் உள்ள பால், முட்டை, சீதாப்பழம், கேழ்வரகு ஆகியவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ளவும்.
2. இரும்புச் சத்தினை அதிகப்படுத்தும் கீரைவகைகள், பேரிட்சை, ராகி, பனைவெல்லம் ஆகியவைகளை அதிகம் சேர்த்துக் கொள்ளவும்.
3. உணவுடன் Vit-Cயை அதிகப்படுத்தும் ஆரஞ்சு, எலுமிச்சை, நெல்லிக்காய், ஆப்பிள், அன்னாசிப்பழம்,. திராட்சை மற்றும் அனைத்து பழவகைகளையும் அதிகம் எடுத்துக் கொள்ளலாம்.

மருத்துவ அறிவுரை

1. மாதவிடாய் இரத்தப்போக்கு அதிகமாக இருக்கும் போது கால் இரண்டையும் சிறிது உயரமாக இருக்கும்படி அமைக்க வேண்டும்.
2. இரத்தப்போக்கு அதிகமாய் இருக்கும்போது கால்கள் இரண்டையும் இறுக்கமாக ஒன்று சேர்த்து வைப்பதன் மூலம் அதிகப்படியான இரத்தப்போக்கினை தடுக்கலாம்
3. மன உளைச்சலை தவிர்க்க வேண்டும்
4. உடல் வன்மையை அதிகப்படுத்த வேண்டும்
5. தேவையான ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்.
6. உணவுப் பொருள்களில் அதிக இனிப்பு, புளிப்பு, மசாலாப் பொருள்கள் (Fast food) தவிர்க்க வேண்டும்.
7. யோகாசனம், உடற்பயிற்சி, தியானம் செய்வது நல்லது.

முடிவுரை

பொதுவாக அனைத்து மகளிரும் தங்களது மாதவிடாய் தொடர்பான பிரச்சனைகளை மருத்துவரிடம் சொல்ல தயங்குவது மற்றும் வீணான மனக்கவலையையும் தவிர்த்து நோயின் ஆரம்ப நிலையிலேயே தகுந்த சிகிச்சையை மேற்கொண்டால் நோய்வராமல் தடுக்கலாம். மேலும் தகுந்த உடற்பயிற்சி செய்வதன் மூலமும் பெரும்பாட்டை தவிர்க்கலாம். அறிஞர் அண்ணா சித்த மருத்துவமனையில் மகளிர் மருத்துவப் பிரிவில் அந்நோய்க்கான சிறப்பு சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

GOLDEN WORDS

"If you want to keep your friends, you should not be continuously giving them advice"
- Anthony Eden.

"Our greatest glory is not in never falling but in rising every time we fall"
- Oliver Goldsmith.

"Reading makes a full man, conference a ready man, and writing an exact man"
- Bacon.

G.M. Hemalatha, III- B.S.M.S.,

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பஞ்சம் போக்கும் ஸ்துதியும் பஞ்ச மூலிகை கற்பமும்

டாக்டர் S.K. சசி, எம்.டி (சி)
உதவி விரிவுரையாளர்,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை –106.

தமிழ் தெய்வப் புலவர்கள் இயற்றிய தமிழ் பாடல்களில் பெரும்பாலும் மேலோட்டமாக பார்க்கும் போது ஒரு பொருளும் அதன் உட்கருத்தை நுண்மையாக ஆராயும்போது பிறிதொரு பொருளும் தருவதாக அமையும்

எடுத்துக்காடாக,

"வாக்குண்டாம் நல்ல மணமுண்டாம்
மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது -
பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமர் சார்வார் தமக்கு"

–ஒளவையார்.

மேற்கண்ட பாடலை மேலோட்டமாகப் படிக்கும்போது, பூக்களைக் கொண்டு தும்பிக்கையானாகிய விநாயகனை தவறாமல் துதித்து வந்தால், சொல் தூய்மையும், மனத் தூய்மையும் (இமயம், நியமம்) செல்வமும், செழுமையும் கிடைக்கும் என்ற பொருள் தருவதாக அமைகின்றது. ஆனால் இதே பாடலை மருத்துவ நோக்குடன் ஆராய்ந்து பார்க்கும்போது அதன் உட்கருத்தின் பொருள் வேறுவிதமாக அமைந்துள்ளது புலப்படும்.

அதாவது

பூ	- தாமரைப்பூவையும்
மேனி	- குப்பைமேனியையும்
தும்பி	- தும்பைப் பூவையும்
கையான்	- கரிசாலையையும்
பாதம்	- செருப்படையையும் குறிக்கும்.

மேற்கண்ட ஐந்து மூலிகைகளும் பஞ்ச பூத மூலிகைகளாகும்.

தாமரைப் பூ	-தேயு பூதம்
கையான்	- வாயு பூதம்
பாதம்	- அப்பு பூதம்
தும்பை	- தேயு பூதம்
குப்பை மேனி	- வாயு பூதம்

இந்த பூதங்கள் முத்தாதுக்கள் இணைந்தே உருவாகின்றன. குற்றங்கள் (தாதுக்கள்) சுவை, பிரிவு வீரியம் கொண்டு அறியப்படுகின்றன.

ஆகவே இந்த பூதங்களால் ஆக்கப்பட்ட இந்த மூலிகைகளை ஒரு சேர உட்கொள்ளும் போது உடல் நன்னிலையில் இருக்கத் தேவையான சத்துக்கள் கிடைத்து உடலுக்கு செயல் தூய்மை,மனத் தூய்மை, லஷ்மியைப் போன்று முகப் பொலிவு, உடல் வாடாமல் இளமையுடன் இருத்தல் ஆகியன உண்டாகும்.

ஆகவே ஒவ்வெரு பாடலையும் படிக்கும் போது சித்த மருத்துவர்களாகிய நாம் இப்பாடலை நன்கு ஆராய்ந்து அதன் உட்பொருளைக் கண்டு பயனடைதல் சிறந்ததாகும்.

பரப்பிரம்ம மருத்துவம்

சீராட்டி பாராட்டி வளர்த்த அன்னை
சிறப் புடனே சீலமதில் வாழ்ந்திடவே
சித்த மருத்துவ துறைதனிலே - எனை
சீராக சிந்தித்து சேர்த் திட்டாரோ
அன்னையின் ஆணை தனை அடிபணிந்து
அணுவிற் கணுவாகு மெந்தன்
ஆதிமூல மருத்துவந்தனை ஆழ்ந் தறிந்து
ஆனந்த பரவசமா யாசிரியரா யானதன்றோ
அகத்தியரின் வழிவந்த எங்கள்
ஆசான்களின் துணை கொண்டு
ஆதிமுதல் அந்தம்வரை ஆராய்ந்து
ஆராதித்த அருமைமிகு மருத்துவ மன்றோ
எம் இனிய மாணவ மணிகளுமே
ஏழேழு ஜென்மமும் எமனையே
ஏறிட்டு எள்ளி நகை யாடிடவே
எடுத்துரைத்த ஏற்றமிகு
மருத்துவமன்றோ
பஞ்ச பூதத்தாலான பாசமிகு
உடலுயிரை
பாரி லுள்ளோர் பாதுகாத்திடவே
பரப்பிரம்மா படைத்திட்ட
பழம் பெரும் சித்த
மருத்துவமன்றோ

–டாக்டர் S.K. சசி எம்.டி (சி),

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE



Dr. **N. USMAAN**, M.D.,D.V.,Ph.D., at a Guest Lecture
"Current Focus on AIDS" (11th Oct 2001)

Students at a NSS Programme

Final Year Students (Varpugal-'97) in an Educational Tour
at All India Institute of Medical Sciences, Chandigarh, Punjab (19th Sep 2001)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE



AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

உணவு உண்ணும் முறை

டாக்டர். T.K. கல்யாணசுந்தரம், எம்.டி.(சித்தா), விரிவுரையாளர்

டாக்டர் N. சித்ரா, பி.எஸ்.எம்.எஸ்., உதவி விரிவுரையாளர்

அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை – 106.

உணவு என்பது ருசிக்காகவும், பசிக்காகவும் மட்டும் அல்லாது உடல் வளர்ச்சிக்கும், சக்திக்கும், ஆரோக் கியத்திற்கும் முக்கியமானதாகும். இப்பயனை ஒருவர் முழுமையாக அடைய வேண்டுமாயின் உணவு உண்ணும் முறையை நடைமுறை படுத்த வேண்டும். சித்தர்கள் உணவு உண்ணும் முறை மற்றும் பரிமாறும் முறை பற்றி நன்கு விவரித்துக் கூறியிருக்கின்றனர்.

ஒருவர் உணவு உண்பதற்கு முன்பு நீராடி தூய்மையான ஆடைகளை உடுத்தி மணம் வீசும் பொருள்களை (சவ்வாது, சந்தனம். புனுகு) பூசிக் கொண்டு, மலர்கள் சூடி, கைவிரல்களில் நவமணிகளில் ஏதேனும் ஒன்றை அணிந்து கொள்ள வேண்டும். உணவை பரிமாறும் பாத்திரங்கள், உணவு அருந்தும் இடம், கை. கால்கள், வாய் இவற்றை சுத்தம் செய்து திருமந்திரங்களை சொல்லி கடவுளுக்குப் படைத்து தூய மனதுடன் தாய்தந்தையர், குருமார்கள், விருந்தாளிகள், குழந்தைகள் தன்னைச் சார்ந்தவர்கள் இருப்பின் அவர்களுக்கு முதலில் அன்னமிட்டு அதன் பிறகுதான் உணவு அருந்த வேண்டும். மேலும், கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய திசைகளில் ஏதேனும் ஒரு திசையில் அமர்ந்து உணவு உண்ண வேண்டும். சப்பணமிட்டு அருந்துதல் மிகச் சிறந்தது. நின்று கொண்டு அருந்துதல், உணவருந்தும் பொழுது அதிகமாக பேசுதல், சிரித்தல் ஆகியவற்றை தவிர்த்தல் வேண்டும். உணவு உண்பவர்கள் மற்றும் உணவு பரிமாறுபவர்கள் குளியல் செய்யவேண்டும்.

உடல் தூய்மை செய்வதற்காகக் குளியல் நன்றாக அழுக்கு நீங்க துவைத்தெடுத்த தூய்மையான ஆடைகள் அணிதல், பாத்திரங்கள் மற்றும் உணவருந்தும் இடம் ஆகியவற்றை சுத்தம் செய்தல் ஆகியவற்றால் பாக்டீரியா, வைரஸ் போன்ற மற்ற கிருமிகள் உணவில் செல்லாமல் தடுக்கப்படுகிறது.

உடலில் மணம் வீசும் பொருள்களை பூசுதல், மலர் அணிதல் ஆகியவை உடலில் வியர்வை நாற்றத்தைக் குறைக்கின்றன. கை விரல்களில் நவமணிகள் அணியும் பொழுது உண்ணும் உணவுடன் அம்மணியின் நற்பண்புகளும் உடலுக்குள் சென்று நன்மையை கொடுக்கின்றன.

கை கால் நகங்களை சோப்பு (அ) கிருமிநாசினி இட்டு நன்றாக கழுவும்போதும், வாய் சுத்தி செய்தலின் போதும் வாய், பல், நக இடுக்குகளில் உள்ள மலினம் (அழுக்கு) மற்றும் கிருமிகள் உணவுடன் உட்செல்வது தடுக்கப்படுகிறது.

திருமந்திரங்களைச் (வழிபாட்டுப் பாடல்கள்) சொல்வதின் மூலம் உணவு உண்ணும்போது யாதேனும் ஒரு காரணத்தால் மன அழுத்தம் இருப்பின் அதனை மறந்து மனதை ஒரு நிலைப்படுத்த முடிகிறது. இதனால் மன அமைதி ஏற்படுகிறது.

இறைவனுக்கு படையல் செய்யும்போது நாம் செய்யும் உணவை ருசிபார்த்தல் கிடையாது. அதனால் அவ்வுணவில் விஷத்தன்மை ஏதேனும் இருப்பின் நமக்கு அறிய வாய்ப்பில்லாமல் போகிறது. எனவே அவ்வாறு படைத்த சாதத்தை காகத்திற்கு இட்டு பிறகு உணவருந்துதல் சிலரிடம் நடைமுறையில் உள்ளது. அவ்வாறு இடும்போது உணவில் விடத்தன்மை இருப்பின் அதை உண்ட காகத்தின் வித்தியாசமான ஒலி மூலம் அறிந்து கொள்ளலாம்.

தாய்தந்தையர், குருமார்கள், பெரியோர்கள், குழந்தைகள் மற்றும் தன்னைச் சார்ந்தவர்கள் இருப்பின் அவர்களுக்கு உணவளிப்பதன் மூலம் நமக்கு மனதிருப்தி கிடைக்கிறது. உணவருந்தும் பொழுது மனதில் எந்த ஒரு கஷ்டமின்றி இருப்பின் உணவுப் பாதையில் உள்ள உறுப்புகள் நல்ல நிலைமையில் தொழில் புரியும். அச்சமயத்தில் செரிமானத்திற்கு தேவையான என்சைம்கள் சரியான விகிதத்தில் சுரக்கப்படுகின்றன. எனவே, நாம் உண்ணும் உணவு நன்றாக சீரணமடைகிறது. மனதில் அமைதியின்மை, சுமைகள், கோபம் போன்றவற்றால் சீரண உறுப்புகள் சரியான முறையில் செயல்படுவது இல்லை.

உணவு உண்ண அகலமாயுள்ளதும், எளிதில் கிடைப்பதுமான வாழை இலையைப் பயன்படுத்துகிறோம். இலையை நுனிப்பகுதி இடப்பக்கமாகவும் உணவை பிசைந்து சாப்பிடுவதற்கு வசதியாக அகலமான பகுதி வலப்பக்கமாயும் இருக்குமாறு இடவேண்டும். பிறகு தூய்மை செய்வதற்காக நீர் தெளித்து துடைத்து உணவை உணவு உண்பவரின் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாக பரிமாற வேண்டும். முதலில் இடப்பக்கம் உப்பு, பின்பு ஊறுகாய், இனிப்பு, காய்கறிகள், கீரைகள், பழங்கள், சாதம்., இவ்வரிசையாக பரிமாற வேண்டும். முதலில் சாதமிட்டு பருப்பு, நெய், வரிசையாக குழம்பு, இரசம், பாயாசம், தயிர் இடவேண்டும்.

உப்பு ஊறுகாய் இடப்பக்கம் வைப்பதன் நோக்கம் இரண்டுமே அளவுடன் உணவில் சேர்த்துக் கொள்ளப் படவேண்டியவை. எனவே வலதுபக்கம் உப்பை பரிமாறும் பொழுது எளிதாக உணவில் சேர்த்துக்கொள்வர். அதனை தடுப்பதற்காகவே இடப்பக்கம் வைப்பதை கடைபிடிக்க வேண்டும்.

மேலும், சித்த மருத்துவத்தில் உணவு உண்ணும் பொழுது முதலில் இனிப்புப் பொருள்களையும் இடையில் புளிப்பு, உப்பு, கார்ப்பு (சாம்பார், ரசம்) காய்கறிகளையும் முடிவில் துவர்ப்புப் பொருள்கள். புளிப்புத் தயிர் ஊறுகாய் ஆகிய இவற்றையும் உண்பதே இன்பத்திற்கு இடமாகும் என்று கூறி உள்ளனர். பெரும்பாலும் தமிழ்நாட்டு உணவுகளில் இம்முறையே கடைபிடிக்கப்படுகிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அறிவியல் ஆராய்ச்சியின்படி 70கிலோ உள்ள ஒரு மனிதனுக்கு அன்றாட தொழில்புரிய நாளொன்றுக்கு 2500 முதல் 2900 கலோரிகள் (சத்துகள்) தேவைப்படுகின்றன. (30 முதல்50 கலோரிகள்/கிலோ). இக்கலோரிகள் அவரவர் எடை மற்றும் உழைப்பைப் பொருத்து மாறுபட்டு அமையும். மேலே குறிப்பிட்டுள்ள 2500-2900 கலோரிகள் வீட்டுவேலை செய்பவர்கள், மாணவர்களுக்கு தேவையானவை. கடின உழைப்பு செய்பவர்களுக்கு அதிக கலோரிகளும், குறைவான உழைப்பு செய்பவர்களுக்கு குறைவான கலோரிகளும் தேவைப்படுகின்றன.

இச்சத்து , மாவுப்பொருள்கள், கொழுப்புப் பொருள்கள் மற்றும் புரதப் பொருள்கள் மூலம் நமக்கு கிடைக்கிறது. அன்றாடம் மாவுப் பொருள்களான அரிசி, உருளைக் கிழங்கு, நிலத்தடிக் கிழங்குகள், நார்ச்சத்து உடைய மாவுப் பொருள்கள் [முழு தானியங்கள் (உடைக்காதது), தோலுடன் கூடிய பருப்புகள், கம்பு, தினை, சோளம்] போன்றவற்றிலிருந்து கிடைக்கின்றன. ஒரு நாளைக்கு 420 முதல் 500 கிராம் வரையிலான மாவுப்பொருள்கள் 1680 முதல் 2000 வரை கலோரிகளைத் தருகின்றன. (1 கிராம் மாவுப்பொருள் - 4 கலோரிகள்.)

கொழுப்புப் பொருள்கள் அதிக கலோரிகளைக் கொடுக்கின்றன. எனவே அவற்றை உணவில் குறைவாகவே சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு நாளைக்கு 60 முதல் 80 கிராம் வரையிலான எண்ணெய், வெண்ணெய், எண்ணெய் வித்துக்கள் (முந்திரி, பிஸ்தா, பாதாம், வேர்க்கடலை) ஈரல், முட்டை மஞ்சள் கரு போன்றவைகள் 540 முதல் 720 கலோரிகளைக் கொடுக்கின்றன. (1 கிராம் கொழுப்பு - 9 கலோரிகள்).

புரதப் பொருள்கள் உடல் வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். புரதத்தில் உள்ள அமினோ அமிலங்களைப் பொருத்தே அவற்றின்தொழில்கள் அமையும். சில அமினோ அமிலங்கள் நம் உடலிலேயே உற்பத்தி ஆகின்றன. உடலில் உற்பத்தி ஆகாத சில அமினோ அமிலங்களை நாம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். எனவே புரதப் பொருட்களான முட்டை வெண்கரு, பருப்பு வகைகள், முளைகட்டிய பச்சைப் பயிறு மற்றும் கொண்டைக் கடலை, சோயாபீன்ஸ், பால் ஆகியவற்றை நாளொன்றுக்கு 60 முதல் 70 கிராம் உணவில் சேர்த்துக் கொண்டால் 240 முதல் 280 கலோரிகள் கிடைக்கின்றன. (1 கிராம் புரதம் - 4 கலோரிகள்).

எனவே நாம் பரிமாறும் உணவுகளில் இச்சத்துக்களைத் தவிர வைட்டமின்கள், கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, செம்பு சேர்ந்த உணவுகளை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டு உணவுமுறைகளில் மேற்கூறிய சத்துககள் அனைத்தும் சேர்ந்த பெரும்பாலானோர் உட் கொள்கின்றனர்.

காலை உணவுகளில் இட்லி, தேங்காய் சேர்ந்த சட்னி, சாம்பார் சேர்த்துக் கொள்கிறோம். இட்லியில் அரிசியும், உளுந்தும் கலந்திருப்பதால் மாவுச் சத்தும், புரதச் சத்தும், அதாவது அரிசியில் சில அமினோ அமிலங்களும், உளுந்தில் அரிசியில் காணப்படாத சில அமினோ அமிலங்களும் உள்ளன. தேங்காய் சட்னியில் கொழுப்புச் சத்தும், சட்னியைத் தாளிதம் செய்யும்போது கொத்துமல்லி, வெங்காயம், கடுகில் உள்ள வைட்டமின்கள், மினரல்கள் உணவில் கலக்கின்றன.

மதிய உணவில் பெரும்பாலும் அரிசி சாதம், பருப்பு சேர்ந்த சாம்பார், நெய், காய்கறி,கீரை வகைகள், ரசம் பிறகு பாயாசம், தயிர் அல்லது மோர் கடைசியில் பழங்கள் உண்ணுதல் பழக்கத்தில் உள்ளது. மேலும் செரிமானத்திற்காக பெருங்காயம், கொத்துமல்லி, கறிவேப்பிலை, சீரகம், மிளகு, பூண்டு சுவைக்காக உப்பு சேர்த்தலும் உண்டு. மேலே குறிப்பிட்ட உணவுகளிலும் மாவு, புரத, கொழுப்புப் பொருட்கள் சரி விகிதத்தில் உள்ளன. நாம் உண்ணக் கூடிய உணவை நன்றாக மென்று விழுங்க வேண்டும். அப்பொழுதுதான் எளிதில் சீரணமாகி நமக்குத் தேவையான சத்துக்கள் விரைவில் கிடைக்கும். உணவு உண்ணும்போது நமது வயிற்றில் 1/2 பங்கு உணவும், 1/4 பங்கு நீரும், 1/4 பங்கு வயிறு காலியாகவும் இருத்தல் அவசியம் என்று சித்தர்கள் நூல்களில் கூறியுள்ளனர். முழு வயிறாக உணவருந்துதல் கூடாதென்கின்றனர். வயிறு காலியாக இருக்கும்போது உணவு நன்றாக நகர்ந்து வயிற்றுத் தசைகள் சுருங்கி. விரிந்து செரிமானத்திற்கு எளிதாகிறது.

அதுபோலவே சித்தர்கள் தம் நூல்களில் மோரைப் பெருக்கி, நெய்யை உருக்கி, நீரைக் காய்ச்சி அருந்த வேண்டும் என்று கூறியிருக்கின்றனர்.

"மோரைப் பெருக்கி" என்பது தயிரில் உள்ள வெண்ணெய்யை நீக்கி மோராக்கி அதனுடன் சரிபங்கு நீர் சேர்த்தலைக் குறிக்கின்றது.. அவ்வாறு மோரைப் பெருக்குவதன் மூலம் மோரில் உள்ள ரெனின்(Renin) என்சைம் உடலுக்குள் சென்று செரிமானத்திற்கு பயன்படுகிறது.

"நெய்யை உருக்கி" என்பது நெய் திடமானதும் நாம் மறுபடியும் சூடாக்கி (உருக்கி) உணவில் சேர்த்துக் கொள்கிறோம் அவ்வாறு உருக்கும்போது அதில் உள்ள நீளமான கொழுப்பு அமிலங்கள் சிறிய கொழுப்பு அமிலங்களாக மாற்றப்பட்டு எளிதில் சீரணமாக உதவுகின்றது.

"நீரைக் காய்ச்சி" என்பது நாம் அருந்தும் நீரை வடிகட்டி கொதிவந்த பின்பு 5 நிமிடங்கள் மேலும் கொதிக்க வைத்து தெளிய வைத்து ஆறிய பின் அருந்த வேண்டும். அவ்வாறு கொதிக்கும்பொழுது நீரில் உள்ள நோய் உண்டாக்கக் கூடிய கிருமிகள் அழிந்து விடுகின்றன. நீரை கொதிக்க வைக்காமல் சூடு செய்து பயன் படுத்துதல் கூடாது. உணவு அருந்திய பின்பு நீர் அருந்துவது சாலச் சிறந்தது.

இரவுநேரங்களில் அருந்தும் உணவு சிறிய அளவில் இருத்தல் வேண்டும். அதனால்தான் இரவில் பெரும்பாலோனோர் சிற்றுண்டி சேர்த்துக் கொள்கிறோம். அதாவது அதிக கலோரிகள் இல்லா உணவையே பயன்படுத்த வேண்டும். இரவில் சிறிய அளவு உணவு உண்டபின் சிறிது தூரம் நடக்க வேண்டும். நடப்பதன் மூலம் உணவு நன்றாக செரிமானமாகி உணவில் உள்ள கலோரிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படுகிறது. அதிக உணவு உட்கொண்டால் இரவில் அதிக உழைப்பு இல்லாத காரணத்தால் கொழுப்பு உடலில் சேர்ந்து உடல் பருமன் மற்றும் பல நோய்கள் உண்டாவதற்கு காரணமாகிறது.

அ.சி. ம. க. 2001 - 2002

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தமிழ்நாட்டில் பெரும்பாலானோர் பயன்படுத்தக் கூடிய சில உணவு வகைகளில் உள்ள கலோரிகளின் அளவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1 இட்லி	-90	கலோரிகள்
1 பெரிய தோசை	-130	"
1 ஊத்தாப்பம்	-110	"
1 பூரி	-150	"
1 ஆப்பம்	-80	"
1 அடை	-190	"
1 சப்பாத்தி	-110	"
4 பெரியதுண்டு பிரட்	-128	"
100 கிராம் பொங்கல்	-356	"
100 கிராம் உப்புமா	-233	"
100 கிராம் கிச்சடி	-168	"
100 கிராம் அரிசி சாதம்	-100	"
500 மிலி மோர்	-80	"
125 மிலி தயிர்	-130	"
275 மிலி பால் (ஆடையெடுத்தது)	-80	"
12 மிலி வெண்ணெய்	-90	"
10 மிலி நெய்	-90	"
10 மிலி சூரியகாந்தி எண்ணெய்	-90	"

(மேலே குறிப்பிட்ட உணவுகளின் அளவுகளும் கலோரிகளும் தோராயமானவைகளே)

நம் உடலின் ஆரோக்கியம் உண்ணும் உணவின் அளவு அவற்றில் காணப்படும் கலோரி விகிதம் மற்றும் உண்ணும் முறை ஆகியவற்றை பொருத்தே அமையும். எனவே நோயில்லா வாழ்வு வாழ்வதற்கு சித்தர்கள் மற்றும் அறிஞர்கள் கூறியுள்ள அறிவுரையின் படி அக்காலத்திற்கு ஏற்றவாறு உணவு உண்பதை நடைமுறைப்படுத்த வேண்டும். இவை இக்காலத்தின் அவசர மற்றும் இயந்திர வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது சிறிது கடினமாக இருப்பினும் "மனமிருந்தால் மார்க்கமுண்டு" என்னும் முன்னோரின் வாக்குப் படியும்,

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"

என்ற திருவள்ளுவரின் வாக்கை மனதில் கொண்டும் முறைகளை நடைமுறைப்படுத்தி நமது ஆரோக்கியத்தை பேணிக் காப்போமாக.

தேனின் மருத்துவப் பயன்கள்

G. லதா,
மூன்றாம் ஆண்டு- பி.எஸ்.எம்.எஸ்.

1. குழந்தைகளின் இருமலுக்கு தேன்15மிலி +5மிளகு தூள் செய்து ஒன்றாய்க் கலந்து குறைந்த அளவில் கொடுத்து வர இருமல் குணமாகும்.
2. தேனும் தண்ணீரும் கலந்து உட்கொள்ள நாட்பட்ட சீதனக் காய்ச்சல் தீரும்.
3. தேனைப் பானம் செய்து அருந்தி வந்தால் கபப்பிணிகள்நீங்கும்
4 தேனை ஒரு குறிப்பிட்ட முறையில் முகத்தில் கருங்கோடுள்ள இடத்திலும், புள்ளிகளுள்ள இடத்திலும் தடவி வெந்நீரால் கழுவினால் நல்ல வசீகரம் உண்டாகும்.
5. அழுக்குடன் கூடிய எண்ணெய் பசையுள்ள கையில் தேனைத் தேய்த்துக் கழுவச் சுத்தமாகும்
6. வாயிலுள்ள கோழையை நீக்கக் குடிநீருடன் தேன் சேர்த்து வாய் கொப்பளிக்க கோழையை நீக்கும்.
7. தேனும், இஞ்சு சாறும் கலந்து சாப்பிட்டால் பசி உண்டாகும். வாய்க்கசப்பும், புளித்த ஏப்பமும் நீங்கும்
8. தேனுடன் எலுமிச்சம் பழச்சாறு கலந்து அருந்தினால் வாந்தி, குமட்டல், தலைவலி குணமாகும்.
9. தேனுடன் வெந்நீரும் கலந்து அருந்தினால் பருத்த உடல் மெலியும். ஊளைச் சதை குறையும்.
10.தேன், காரட் சாறு கலந்து சாப்பிட உடல் இளைக்கும்.

விண்மீன்கள்

பூமிப்பெண் தன் கட்டழகை மூட
கருப்புப் போர்வை அணிந்து
உறங்கச் சென்றாள் பாவம்
போர்வையில் ஆயிரம் பொத்தல்கள்

ப.இராசலட்சுமி, நான்காம் ஆண்டு

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

புற்று நோய்க்கு சித்திர மூலக் குளிகை

சிவ. செந்தில் கருணாகரன்
இறுதியாண்டு பி.எஸ்.எம்.எஸ்.,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை –106

"கரையான் புற்றெடுக்க கருநாகம் வந்து குடியிருக்க" என்றாற் போல் நாதன் உள்ளிருக்க வேண்டிய கோயிலாம் உடலில் கொடிய நோயாம் புற்று நோய் சில நிலைகளில் குடியேறிவிடுகிறது. உலகை ஒருகாலத்தில் உலுக்கிக் கொண்டிருந்த நோயை "Canter" நண்டு என குறிப்பிட்டு "Cancer" என குறிப்பிடப்படுகிறது. இக் கொடிய நோய் பழங்காலந்தொட்டே விரிவாக காணப்படுகிறது. குறிப்பாக தேரையரின் மாணாக்கனான யூகி முனி குறிகுணங்களின் அடிப்படையில் இன்றைக்கு அழைக்கப்பட்டு இந்த புற்று நோயினை **'துன்மாங்கிசம்'** என குறிப்பிடுகின்றார்.

சூலை நோயில் உட்கார சூலையைப் பற்றி பேசும் போது **"அதிக துன்மாங்கிசந்தான் வளர்ந்து மேவி"** என கூறுவதோடு.

பெருவயிறு நோயில், கருங்கல் போல் மேல் வயிறு கல் பெருவயிற்றில் வீக்கம் ஏற்படுகிற புற்று நோயின் முதல் நிலையாம்.

வில் பெருவயிற்றில் **"வில் அதட்டியே வளைந்தார் போல் மிகு வுண்டாம்"** என்பதோடு புற்று நோயில் இரண்டாம் நிலைகளையும் விரிவாகப் பேசுகிறார்.

மேலும், குலைமுட்டி, பெருவயிற்றில் **"குழவி போல் குலையில் சேரும்"** எனவும் குரல் கம்மல் (Hoardeness of voice) ஏற்படும் எனவும் தெளிவாய் விளக்குகிறார்.

மேலும் கிரந்தி. விரணம், தோன்றும் காரணத்தினை கூறுங்கால், கேடடைந்த குருதி, சதை, கொழுப்பு இவற்றின் வேறுபாட்டாலும் வளியும், ஐயமும், கெட்டு கிரந்தி தோன்றும் என்றும், கட்டிகள் உடைந்தும், ஐய வளர்ச்சியினாலும் புண் உண்டாகும் என்றும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக விவரித்து கூறப்பட்ட., இந்த நோய் நிலைகளைத் **தீர்க்க சித்திர மூலக் குளிகை** பயன்படுகிறது. இந்த மருந்தினை தேர்வு செய்வதற்கு காரணம், நோய் நீக்க சிறப்பாக பயன்படுமாறு நேர்த்தியாய் அமைக்கப்பட்ட மருந்தென்பதே. இதில் சேரும் சரக்குகளின் பண்புகளையும் மருந்தின் செய் நுட்பத்தையும் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

சித்திர மூலக் குளிகையின் செய்முறை:

"சித்திரஞ் சேர் மூலமதே சீராகக் கழஞ்சி யொன்று
கத்திரஞ் சேர் பூரமது வுங் க்ழஞ்சு - சத்தியங் கேள்
ஒம மொரு கழஞ்சி யோது பனை வெல்லமொரு
சாம மிரண்டு தானரைப் பாய்தான்"

"அரைத்து மிளகளவு அன்பான வுண்டை செய்து
தரையிலிலொரு பத்து தினந் தானருந்த"

சித்திரமூலம்	–	1 கழஞ்சு
பூரம்	–	1 கழஞ்சு
ஓமம்	–	1 கழஞ்சு
பனைவெல்லம்	–	3 கழஞ்சு

ஆறு மணி நேரம் அரைத்து எடுத்து மிளகளவு மாத்திரைகளாக செய்து கொள்ள வேண்டும். இது குணபாடம் (மூலிகை வகுப்பு) படி செய்யப்படும் முறை.

இதில் தேங்காய்ப்பால் சேர்த்து கொள்வது நீதியரசர் பலராமையா அவர்களின் நூல் தரும் குறிப்பாகும்.

இதனை பத்தியத்துடன் உண்டுவர விரணம், இரணக்கிரந்தி, யோனிப்புற்று, சூலை, கள்ளிப்பூக் கிரந்தி, லிங்கப்புற்று, பவுத்திரம், கன்னப்பிளவை, மார்சிலந்தி, விப்புருதி, மேகரணம், எண்வகைக் குன்மம், இவைகளை போக்கும் என்று கூறப்படுகிறது.

மேற்கூறிய மருந்தில், முதல் சரக்காகவும். மருந்தின் பெயராகவும் உள்ள சித்திரமூலமே மூலச்சரக்காகப் பயன்படுகிறது. இது எவ்வாறு செயல்புரிகிறது என்று பார்ப்போம்.

அழல், வன்னி, கனலி,. தழல், அக்கினி, கொடிவன்னி, வலிவன்னி, வன்னிபிரியம் என வேறு பெயர்களைக் கொண்ட சித்திரமூலம், கார்ப்பு (தீ+வளி) மற்றும் விறுவிறுப்பு சுவைகளையும், வெப்பத் தன்மையும் இயற்கையாகவே பெற்றுள்ள ஒரு தீக் கூறு மூலிகையாகும்.

"கட்டி விரணங் கிரந்தி கால்கள் அரையாப்புக்
கட்டி சூலை வீக்கங் காழ் மூலம் - முட்டி ரத்தக்
கட்டு நீரேற்றங் கனத்த பெருவயிறும்
அட்டுங் கொடி வேலி யாம்"

கட்டி, புண், கழலை, வளிநோய், அரையாப்புக் கட்டி, குத்தல், மூலரோகம், பெருவயிறு இவைபோம் என்றும்

"கட்டியே சூலைக்கட்டு கரு திடு குறிப்புண் கிரந்தி
ஒட்டுமே கரணத் தோடு முறுமரை யாப்பு மன்றி
விட்டிடா நெறிச்சுரம்பின் வியன் விடமச்சுரந்தான்
பொட்டுடனப் பறந்து போகும் புகழ் கொடி வேலி கண்டால்"

சூலைக்கட்டு, குறிப்புண். கிரந்தி. மேகப்புண். நெறிசுரம். நச்சுசுரம் முதலியவையும் தீரும் எனவும் கூறப்பட்டுள்ளது. முன்பே கூறியவாறு துன்மாங்கிச வளர்ச்சி, புண், கிரந்தி இவை அனைத்தும் ஐயவளி குற்ற ஆதிக்கத்தின் காரணமாகவே உண்டாகிறது என்றும் அறிந்தோம்.

இதைத் தன்னிலைப்படுத்த தீக் கூறு உள்ள மருந்துகளையே பயன்படுத்தல் முறையாகும். இதற்காகவே தீக் கூறு தன்மையுடைய சித்திர மூலம், சித்திர மூலக் குளிகையில் முதன்மை இடம் பெற்றிருக்க வேண்டும் என்று நாம் உறுதியாக கருதலாம். இதற்கு சான்றாக சில நவீன ஆய்வு முடிவுகளை துணையாக இங்கு நாம் கவனத்தில் கொள்வோம்.

Constituents

PLUMBAGIN - $C_{11}H_8O_3$

(2- Methyl, 5- Hydroxy; 1.4 Napthoquinone) is present in an yellow coloured amorphous condition in the Parenchyma of secondary cortex and in roots of plumbago zeylanica.

அ.சி. ம. க. 2001 – 2002

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

Action

It is a powerfull irritant & it has well marked Antiseptic properties. In small dose it stimulates the central nervous system and act as a sudorific (an agent that promote sweating).

Biological Activity

Plumbagin administrated intra tumorally and orally at 2mg/ Kg show decreased tumour growth by 70% & 60% respectively.

Results published in international journal for supporting the above concept.

Plumbagin prescribed for cancer treatment in Siddha System of Medicine. Reduces Toxicity & enhanced antitumour efficacy of plumbagin using poly (Lactic -co - glycolic) bio degradable injectable implant.

Plumbagin treated groups were able to reverse the changes in the hematological parameters. Protein & PCV conzequest to tumour inoculations.

The Antitumour activity of plumbagin is tested for methyl cholanthrene induced fibrosarcoma in rats for the primary screening.

It is sure against Dalton's Ascitic Lymphoma (DAL) in Swiss albino mice. It is also tested against P_{388} Lymphocytic leukemia & L_{1210} lymphoid leukemia.

மேற்கண்ட ஆய்வு முடிவுகளைக் கொண்டு, தீக் கூறுபாட்டினுடைய சித்திரமூலம் புற்று நோய்க்கு சிறந்த நேரடி மருந்தாகப் பயன்படும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

பூரம் (Hydragyrum Subchloride)

பூரம் சேர்வதின் காரணத்தினை ஆராயுங்கால். இச்சரக்கு வெப்பவீரியமும், தீக்கூறு உடைய காரப்பு, உப்பு சுவைகளையும் தன்னகத்தே பெற்றுள்ளது.

இதற்கு கடுமையான நோய்களை நீக்கக் கூடிய தன்மையும், பேதியை உண்டு பண்ணும் குணமும். பித்த நீரை அதிகப்படுத்தும் குணமும், கொண்டதோடு உடற் தேற்றி, உமிழ்நீர் பெருக்கி கிருமிநாசினி ஆகிய செய்கைகளையும் பெற்றுள்ளது. இதன் பொதுகுணத்தில்

"இடைவாத சூலை எரி சூலை குன்மம்
தொடை வாழை வாதமாஞ் சோணி - யிடையாதோ
வொக்கு ரச கர்ப்பூர மொன்றே யளவோடுநல்
இக்கு வெல்லத் தேழு நாளி"

சுத்தித்த இரசகற்பூரத்தை அளவுடன் வெல்லத்தில் ஏழு நாள் கொடுக்க இடுப்பைப் பற்றிய சூலை , ஆங்காங்கு எரிச்சலைத் தருகின்ற சூலை, வாத குன்மம், தொடை வாழை, வாத ரத்த நோய் முதலியன தீரும்.

மேற்கூறியவாறு இதுவும் தீயின் கூறுபாட்டினை உடையதாலும், விரணத்திற்கான மருத்துவம் கூறும் இடத்தில் உடலில் உள்ள குற்றங்களையும், உடற் கட்டுகளையும் தூய்மைப் படுத்தும் வகையில் மலத்தை முறையாக கழிக்க வேண்டும் என்பதினாலும் சூலைக்கும் தொடைவாழைக்கும் நேர்மருந்தாகப் பயன்படுவதினாலும் இதனை சேர்த்திருக்க வேண்டும் என்று நாம் கருதலாம்.

ஓமம் (Carum Copticum)

ஓமம் சேர்வதின் காரணத்தினை ஆராயுங்கால் இதுவும், தீக் கூறுபாட்டினையுடையது, கார்ப்பு சுவையையும் வெப்ப தன்மையையும் கொண்டுள்ளது. இதற்கு இசிவகற்றி (Anti Spasmodic) அழுகலகற்றி (Anti Septic) பசித்தீத் தூண்டி (Stomatic) அகட்டுவாயகற்றி (Carminative) செய்கை உள்ளதினாலும்.

"சீத சுரங் காசந் செரியாமந் தம் பொருமல்
பேதியிரைச் சல் கடுப்புபேராமம் -ஒதிருமல்
பல் லொடுபல் மூலம் பசுமிவை நோயென் செயுமோ ?
சொல்லொடு போம் ஓமமெனச் சொல்"

செரியா மந்தம் பொருமல் போன்ற வாயு கோளாறுகளையும், பேராமம் போன்ற கட்டிகளையும் மூலம் போன்ற சதை வளர்ச்சிகளையும் நீக்க வல்லதாலும் இதனைச் சேர்த்திருப்பார்கள் என்று நாம் கருதலாம்.

பனை வெல்லம்:

மேற்கூறி மூன்று சரக்குகளுக்கு நிகர் பனை வெல்லம் சேர்க்கப் பட்டிருக்கும் காரணம் ஆராயுங்கால் அகத்தியர் குணவாகடத்தில் கூறியுள்ள படி

..."தங்கு பனை
வெல்லத்தால், வாத பித்தம் வீறுகபஞ் சந்நிநோய்
வல்ல ருசி குன்மமறு மால்"

முக்குற்றத்தினால் வரும் நோய்களும், முப்பிணி சுவையின்மை குன்மம், இவைகளும் நீங்கும் என் று கூறியுள்ளதாலும் பூரத்தினை வெல்லத்தில் தான் கொடுக்க வேண்டும் என்பதினாலும் பொதுவாக வெப்பத்தினை தணிக்கக் கூடிய தன்மை இதற்கு இருப்பதினாலும் இதனை சேர்த்திருக்க வேண்டும் என்று நாம் கருதலாம்.

தேங்காய்ப் பால்

நீதியரசர் பலராமையா அவர்களின் நூல் தரும் செய்முறை படி இதில் தேங்காய்ப்பால் சேருவதர்க்கு காரணம் ஆராயுங்கால்

.........."பித்தமுறும் வண்கரப்பானும் படருந்
தாது மிக விருத்தியாந் தாழ்குழலே - போத நல்ல
அன்ன மிரங்கு மதியுருசியுண்டாகுந்
தென்னங் காய்ப் பாலாந் நெளி"

(அகத்தியர் குணவாகடம்)

இதற்கு உடல் வன்மையைப் பெருக்கும் ஆற்றலும். தீக் குற்றத்தை உண்டாக்குந் தன்மை உடையது என்பதினாலும், மேலும் சேங்கொட்டை, இரசம், பூரம். வீரம், பாடாணம், முதலிய நஞ்சுகளால் உண்டான வாய்ப்புண்ணையும் போக்கும் என்பதினாலும் இதனை சேர்த்திருக்க வேண்டும் என்று நாம் கருதலாம் . எனவே மிக நேர்த்தியான முறையால் தனி மருந்துகளை சரியான விகிதத்தில், நம் தத்துவ அடிப்படையில் அமைந்துள்ள சித்திரமூலக் குளிகை போன்ற சித்த மருத்துவத்தில் அமைந்துள்ள மருந்துகள் யாவும் மிகுந்த அறிவியல் பின்னணி உடையது என்பது புலனாகிறது.

ஆதார நூல்கள்
1. சித்த மருத்துவாங்க சுருக்கம்
2. குணபாடம் - மூலிகை வகுப்பு, (மரு. முருகேச முதலியார்)
3. குணபாடம்- தாது, சீவம் வகுப்பு (மரு. இரா.தியாகராசன்)
4. யூகி வைத்திய சிந்தாமணி
5. புற்றுநோய்க்கு மருத்துவம் (நீதியரசர் பலராமையா)
6. Medicinal Aromatic Plant Abstract (MAPA)
7. Compendium of Indian Medicinal Plants.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ANTHRAX - A SIGNIFICANT ROLE IN BIO-TERRORISM

R. Chander

Final B.S.M.S., Govt. Siddha Medical College, Chennai -106.

Until, Anthrax spores started spreading through the Mail, there was no more knowledge and concentration, about it. Now it has become a current issue, since the Bacillus anthracis is considered to be a potential agent which is used as a Biological Warfare Weapon. The Department of Defence (DOD) has begun Vaccination against Anthrax spores to all active Military personnel who might be involved in conflict.

Anthrax is most common in agricultural regions where, it occurs in animals. When anthrax affects humans, it is usually due to an occupational exposure to infected animals or their products.

Bacillus anthracis spores can live in the soil for many years, and humans can become infected with anthrax by handling products from infected animals or by inhaling anthrax spores from contaminated animal products. Anthrax can also be spread by eating undercooked meat from infected animals. Anthrax can be found globally. It is more common in developing countries or countries without Veterinary Public Health Programs.

Direct person -to- person spread of anthrax is extremely unlikely to occur. Communicability is not a concern in managing or visiting patients with inhalational type of anthrax.

What Is Anthrax ?

It is a acute infection caused by spore-forming Bacillus anthracis, generally occurs in wild and domestic vertebrates. Spores of Bacillus anthracis can be produced and stored in a dry form, which are now spreading through mail. It also occurs in humans when they are exposed to infected animals.

Types Of Infection

Infection occurs in 3 forms.

* Cutaneous.
* Inhalation.
* Gastro - Intestinal.

Cutaneous (Death rate-20%)

It occurs when the bacterium enters a cut or abrasion on the skin.

Initially a characteristic oedema develops at the site. This develops into papule within 12-30 hrs after infection. The papule changes rapidly into a vesicle, then a pustule and finally into a necrotic ulcer, from which infection may disseminate giving rise to Septicemia.

Inhalation [Death -rate : 90%]

Flu-like symptoms with fever, chest pain, and cough with systemic haemorrhagic pathology.

Gastro-intestinal (Death rate-25 to 60%)

Acute inflammation of the intestinal tract.

Initial signs are

Nausea

Loss of appetite

Severe diarrhoea etc.

Death is due to oxygen depletion, secondary shock increased vascular permeability, respiratory failure & Cardiac failure.

Pathogenesis

Of these, Inhalation type is the most common one. The incubation period is generally 3-7 days. The spores enters through the nose and mouth. When enters into the airsacs they are picked up by macrophages and carried to the lymph nodes. During their vegetative stage, cells of the anthrax agent multiply in the lymph nodes of affected persons. The spores then germinates becoming anthrax bacteria which starts reproducing. This may occur nearly 60 days after the exposure.

The bacteria then leaves the macrophages and produces a toxin that enters into other cells. The toxic factor consists of 3 proteins.

* Protective Antigen (PA)
* Oedema Factor (OF)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

* Lethal Factor (LF)

These are individually harmless, but the proteins are deadly when combined. PA binds to the cells surface which creates a passage for OF and LF to enter. Inside, the toxins cause the cells to swell or die. Blood Vessels begin to leak causing a drop in BP and inadequate blood supply to vital organ.

Vaccination

Vaccination is reported to be 93% effective. Anthrax vaccine intended for animals should not be used for humans. The vaccine is a cell-free filtrate vaccine, which means it contains no dead or live bacteria in the preparation. Persons in the laboratory, Military personnel, persons handle potentially infected animals only should get vaccinated.

People who should not get the anthrax vaccine are those with a true hypersensitivity reaction to a previous dose of anthrax vaccine. People infected with HIV, people who have other kinds of immune suppression, and people under 18 and over 65 yrs of age. Pregnant women should be vaccinated only if absolute necessary, since mild local reactions occurs in 30% of recipients.

It may also produce slight tenderness and redness at the injection site. Severe local reactions are infrequent and consists of extensive swelling, systemic reactions occur in fewer than 0.2% of receipients.

Larger reaction at the injection site occur in about one in a hundred vaccine receipients. Beyond the injection site, from 5% upto 35% will notice muscle aches, joint aches, head aches, rash, chills, fever, nausea, loss of appetite, malaise or related symptoms. These symptoms usually go away after a few days. Serious events, such as those requiring Hospitalization are rare.

Protocol For Vaccination

Immunization consists of 3 subcutaneous injections given 2 weeks apart followed by 3 additional subcutaneous injections given at 6, 8 & 12 months. Annual booster injections of the vaccine are recommended thereafter.

Diagnosis

Diagnosed by isolating Bacillus anthracis from the blood, skin lesions or respiratory secretions or by measuring specific antibodies in the blood of persons with suspected cases.

Treatment

Antibiotics such as Penicillin, Tetracyclines & Fluroquinones are effective if administered before the onset of Lymphatic spread or Septicemia.

Biological Warfare

Now, there is a possibility of creating aerosols containing Anthrax spores, which has made Bacillus anthracis a weapon for Bio-terrorism. Spores of Bacillus anthracis can be produced and stored in a dry form and remain viable for decades in storage or after release.

THREE THINGS

Three things to respect
old age, religion & law
Three things to love
Purity, Honesty & Hard work
Three things to admire
Beauty, intellect & Character
Three things to cultivate
courage, Carefulness & Comtentment
Three things to maintain
Promise, friendship & affection
Three things to avoid
Smoking, drinking & gambling
Three things to control
Tongue, temper & temptation
Three things to watch
Speech , behaviour & action
Three things to prevent
Laziness, falsehood & slang

-M.S. ShreeDevi, Final Year

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

PARKINSONISM

Aarthi Pannerselvam
Final B.S.M.S., Govt. Siddha Medical College, Chennai-106

Parkinsonism is an Extrapyramidal Syndrome characterised by tremor, muscular rigidity and hypokinesia. It is a senile disease occuring after the age of 60, onset being insidious. The main pathophysiological mechanism is either defective release or impaired response to the neurotransmitter dopamine in the corpus striatum. The role of neurotransmitter substances such as Acetyl choline and Dopamine in development of extrapyramidal disorders is well established.

Synapses And Neurotransmitters - A View

Before going in detail about pathology of Parkinsonism, it is important to know about synapse and neurotransmitters. The information is transmitted in the central nervous system, mainly in form of nerve action potentials namely nerve impulses, through a succession of neurons, one after another.

Synapse: Interneuronal junctions are known as synapses. It may be axodendritic (Axon-dendrite) or Axosomatic (Axon-cell surface) and sometimes dendrite-dendrite.

Synapses are of two types:

1) Electrical synapse
2) Chemical synapse

Chemical synapse more common in human beings in which nerve impulses are conducted by release of neurotransmitters. Neurotransmitters are secreted in transmitter vehicles in the neurons. Chemical synapse have one exceedingly important character of conducting impulses in one direction only.

Consists of 3 main parts.

1) Pre-synaptic neuron - which receives the impulse and secretes the transmitters.
2) Synaptic - between the two neurons where the transmitter is released.
3) Post synaptic neuron - the neuron on which the transmitter acts, action being either excitatory or inhibitory. More than 40 neurotransmitter substances, have been discovered thus for. Some of the best known are Acetylcholine, Dopamine, Histamine, GABA, Serotonin and Glutamate.

In Parkinsonism, the metbolism of Dopamine, a inhibiting neurotransmitter is affected.

Dopamine

Immediate precursor of non-epinephrine act as a neurotransmitter in motor function of nervous system. Under normal circumstances, dopamine is present in the pigmented cells (melanin) of substantia nigra and in neostrictum of corpus strictum.

Aetiology

1. Idiopathic - common in elderly persons.
2. Post Encephalitic Parkinsonism.
3. Symptomatic Parkinsonism - Tumors, Drug induced - Chronic intake of antipsycotic drugs, head injury, metallic poisoning, Syphilis,Viral infection.

Major clinical features

Both sexes are affected equally.

Motor: Tremors, Hypokinesia, Muscular rigidity, Asthenia.

Postural: Stooped, bent stance, Festinating gait, (Shuffling gait) Mark like facies (Expressionless).

Autonomic: Sexual difficulties, sweats, Seborrheae, Constipation, Fatgiue.

Mental: Slowed thinking, mild dementia, depression, insomnia.

Tremor: Pill rolling type in fingers. Affects both hands and legs, mouth and tongue.

Hypokinesis: Difficulty in initiating fine movements and slowness of gait and difficulty with tasks such as fastening buttons or writing.

Rigidity of muscular tone: Causes stiffness and flexed posture.

May be unilateral initially but gradually becomes bilateral.

Management

Any identifiable cause like drug induced can be treated. During induced parkinsonism respond

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

to withdrawal of curative drug. In case of depletion of dopamine neurons, it is possible to overdrive the remaining neurons to produce more dopamine by administering L-DOPA, immediate precursor of dopamine.

Dopamine cannot be administered as it cannot cross the blood-brain barrier. Hence, precursor of Dopamine, L-DOPA can be administered.

Parkinsonism can be related to a type of Vatha disease in Siddha medicine.

பாணிக்கம்ப வாதம்

"மார்க்கமாய் வாய்வுமாய் மெய்நிறைத்து
வயிறு தனில் பசியிலாது ஊணுமற்று
நார்க்கியமாய் ஞாலத்து நடக்கையற்று
நடுக்கமாங் கையிரண்டுந் திமிருண்டாகும்
உர்க்கமா யுறக்கிமில்லாது உணர்ச்சியற்று
உதறியே சரீரமெங்கும் உலர்ந்து காணும்
பார்க்கமாய் வாய்விட்டு அலத்தலாடும்
பாணிக் கம்ப வாதத்தின் பாங்கு தானே"

உடல்முற்றிலும் வளிக்குற்றத்தை நிறைத்து பசித்தீயை கெடுத்து, நடக்க முடியாமை, கை கால் நடுக்கம், கை திமிர்தல், தூக்கமின்மை, உணர்ச்சியின்மை, உடல்வற்றிப்போதல், வாய்பிதற்றல், காலை மடக்க முடியாமல் கொம்பைப் போல நிலைக்கச் செய்துவிடும்.

Treatment for Parkinson's disease

சித்த மருத்துவத்தில், இந்நோயிக்கு பூனைக்காலி விதை சூரணம் வழங்கப்படுகிறது.

பூனைக்காலி- Mucuna pruriens

இதன் விதைக்கு நரம்புரமாக்கி செய்கை, ஆண்மை பெருக்கி செய்கை உண்டு. இதன்விதையை ஊறவைத்து, மேல் உறை நீக்கி அல்லது சூரணமாகவோ, இளகமாகவோ, உட்கொள்ள, பாரிசவாதம், வெள்ளை, வெட்டை முதலியவை நீங்கும்.

Analysis of Seeds of Mucuna pruriens

Seeds contain dihydroxyphenylalanine or DOPA (composition - 1.5%).

Also Glutathione, Lecithin, Gallic acid and Glucosides are present.

Protein : 25.03%
Calcium: 0.16%
Iron: 0.02%
Mineral water: 3.95%
Alkaloids - Nicotine, Prurienine, Prurienidine

As dopa, precursor of dopamine is present in Mucuna pruriens, it can be administered in treatment of Parkinsonism. It acts by activating the other neurons of substania nigra to secrete dopamine.

Physiotherapy and speechtherapy can also be helpful to reduce rigidity and corrects abnormal posture and speech.

Prognosis

The prognosis of the disease depends partly on the age of onset. If the symptoms starts in middle life, the disease is usually slowly progressive and shorten life span because of complications. Onset after the age of 70, shorten life and cause severe effects. The dose of L-Dopa should be kept low enough to avoid any complications.

முயற்சி திருவினையாக்கும்

1. 15 வயதில் கிரோஷியஸ் முதன்முதலில் என்ஸைக்ளோபிடியா அச்சிட்டு வெளியிட்டார்.
2. 16 வயதில் கிரேக்க வீரர் அலெக்சாண்டர் தன் தந்தையின் படைக்கு தலைமை வகித்தார்.
3. 17 வயதில் பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்தை பற்றிய உண்மைகளை கலிலியோ கண்டுபிடித்து வெளியிட்டார்
4. 18 வயதில் பிரெஞ்சு படைக்கு தலைமை வகித்து போர் முரசு கொட்டினார் ஜோன் ஆஃப் ஆர்க் என்னும் வீர மங்கை
5. 19 வயதில் ஜார்ஜ் ஸ்டீபன்சன் நீராவி என்ஜினைக் கண்டுபிடித்தார்.
6. 20 வயதில் வாஷிங்டன் இர்வின் புரட்சிக் கருத்துகளை எழுதினார்
7. 21வயதில் பீதோவன் சங்கீத உலகில் சாதனை படைத்தார்.
8. 22 வயதில் ஆல்பிரட் நோபிள் வெடிமருந்தை கண்டுபிடித்தார்.
9. 23 வயதில் ஜூலிஸ் சீசர் போர்க்களத்தில் அமோக வெற்றி பெற்றார்
10. 24 வயதில் நியூட்டன் பூமிக்கு ஆகர்வின் சக்தி உண்டு என்ற உண்மையை கண்டு பிடித்தார்.

-ரெ. பரிமளா இறுதி ஆண்டு

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வான்புகழ் விண்புகழ் எட்ட
வாழ்த்துக்கள்

மரு. G. சிவராமன் B.S.M.S.,

ஆரோக்யா சித்த மருத்துவமனை

255, கீழ்பாக்கம் தோட்டம் மெயின் ரோடு
சென்னை - 10
போன்: 6461455
மின்னஞ்சல் : herbsiddha@hotmail.com.

With best Compliments from

Dr.S. Ashok, B.S.M.S.,
'Deeksha Nalavazhvagam'
(A Unit of SHHARC (Regd)

Saradha College Main Road,
Salem.
Ph: 335324 Cell : 98427-40041

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வாழ்த்துகளுடன்

Dr. G. சங்கர், B.S.M.S.,
Dr. வளர்மதி சங்கர், B.S.M.S.,

112, NGGO Colony
Chengalpattu
Ph: 28793 Cell : 98423 - 28793

With Best Compliments from

Dr.P. Thirumuruga Venkatesan M.D(S).,
Dr. R.N. Gangadevi, B.Sc., M.B.B.S.,

Vasantha Hospital

Koneri Patty
Edappady - T.K.
Salem -Dt.
Ph: 04213-33301, 33302
Cell: 98421-33302

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

Compliments From

Dr. **S.Senthil Kumar** B.S.M.S., M.D(s).
Consultant Siddha Physician

SRI MURUGAN SIDDHA CLINIC

Clinic:
1.E. L.IC. Building Complex,
Panruti - 607106
Ph: 04142-44899

Residence:
31, K.K. Nagar,
Cuddalore -607001
Ph: 04142-315499

Compliments From

ELEGANT IN BIRTH !

ETERNAL IN WORTH !

AMRUTHAA SIDDHA CLINIQUE

 # Q 197, Kannadasan Street,
M.M.D.A. Colony,
Arumbakkam
Chennai -106

From the nest of
NOBLE MEDICINE

MOBILE : 98401 - 19186

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

With Best Compliments From

INDIAN HOSPITAL

A MULTI -SPECIALITY HOSPITAL

HAND SURGERY & ACCIDENT CARE

LAPAROSCOPIC CENTRE

No. 533, P.H. Road, Arumbakkam
chennai - 600 106

☎ 4756092/4756096

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சாகாவரம் பெற்ற சித்தர்களால்
சீராட்டி, பாராட்டி வளர்ந்த - சித்த மருத்துவம்
தீராத நோய் கூட்டங்களை - அறவே
தீர்த்திடும் சித்த மருத்துவம்
தேறாத உடல் கட்டுகளை - நன்கு
தேற்றிடும் சித்த மருத்துவம்
உணவே மருந்தென்று உணர்த்தும் மருத்துவம்
இஞ்சி, மிளகு, நல்மஞ்சள் மிளகாய்
பூண்டோடு, சீரகம், புரியும் விந்தைகளை
புதிய ஆண்டில் புரிந்து உண்பீரேல்
நோயின்றி
நூறாண்டு
வாழ்வீரே !

நல்வாழ்த்துகளுடன்

AGASTHIYAR SIDDHA CLINIC

AGASTHIYAR PHARMA

Dr. S. Govindasamy B.I.M.
Dr. G.Rajkumar B.A.M.S.
Dr. G.Satish kumar B.S.M.S.

No. 132 AB, Panchali Amman Koil St.
Arumbakkam.
Chennai-600 106

Ph: 044-475 7538
Cell : 98400- 25847

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வார்ப்புகள் வார்த்தெடுக்கும்
வாடாமலர் வாசம் வீசட்டும்!
சித்தர் குரல் ஓங்கி ஒலிக்கட்டும்
விண்ணும் மண்ணும் அதிர!
வள்ளுவம் போல் 'வான்புகழ்' பெறட்டும்!

வாழ்க!
மாணவக் கண்மணிகள்
களப்பணியும்
தொண்டும்!

தமிழ் மருத்துவக் கழகம்

(பதிவு பெற்றது)

10, அழகிரி நகர்,
வடபழனி,
சென்னை

இருப்பாய் தமிழா நெருப்பாய்!

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கருவளர்ச்சி ஓர் ஒப்பு நோக்கு

அ. சுபத்ராதேவி, இறுதியாண்டு, பி.எஸ்.எம்.எஸ்.,
டாக்டர். பேரா. குரு. கணபதி, எம்.டி. (சி), துறைத்தலைவர்,
டாக்டர். ஜி. திலகவதி, பி.எஸ்.எம்.எஸ்., உதவி விரிவுரையாளர்.
